
சிவமயம்

# குமரகுருபரன்



த-3115

மலர் 25 ] 1974-௵ பங்குனி மீ 1-ம்வ (14-3-74) [ இதழ்

தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ 5.00

## ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி.

2 திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் (J. P.)
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை-85

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அருள்மொழி அமுது | ... 145 |
| 2 | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்த்துறை யாசிரியர் எட்டாவது கருத்தரங்கு...... | ... 152 |
| 3. | உண்மைச் சமயமும், உண்மைத் தெய்வமும் | ... 156 |
| 4. | அருட் கொண்டல் | .... 162 |
| 5. | தமிழ்நாடு மக்கள் பேரவையில் | ... 169 |
| 6. | கந்தரநுபூதி வழிபாட்டு 108 போற்றி | ... 172 |
| 7. | கல்வெட்டுக்களும் செப்புத் திருமேனிகளும் | ... 175 |
| 8. | விநாயகர் துதி | ... 180 |
| 9. | திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் சரஸ்வதி பூசை விசயதசமி மாகேசுவர பூசை நிதி முதற்பொருள் ரூ 25.000 | ... 182 |
| 10. | மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை | 43 to 45 |

T-UN-441.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை


# குமரகுருபரன்



மலர் 25 | பிரமாதீச ஹு பங்குனி மீ 1வ. [14-3-74] | இதழ் 3


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

## அருள் மொழி அமுது


திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.


-O-

### 9. தம்பிரான் தோழர்

"பித்தா" என இறைவனை அழைத்துப்பாடிய பெருமானார் நாவலூர் திரும்பி, அங்கும் இறைவனைப்பாடி, திருத்துறையூரை வணங்கி சிதம்பரம் செல்ல வேணுமென்ற விருப்புடன் புறப்பட்டுத் திருவதிகை அடைந்தார். திருத்துறையூரில் "தீவினையால் அவநெறி செல்லாது என்னைத் தடுத்தாட்

கொண்ட பெருமானே! புலன் வழி செல்லாது மனத்தை ஒருமைப்படுத்தி நினைத்து பூசைசெய்யும் தவநெறி அருள்வாயாக' என்று பாடினார் இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பிலே

செய்யார் கமலம் மலர் நாவலூர் மன்னன்
கையால் தொழுதேத்தப்படுந் துறையூர் மேல்
பொய்யாத்தமிழ் ஊரன் உரைத்தனவல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறிதானே.

என்று பாடினார். இது இவர் நமக்கு சமய தீட்சையளித்த மாதிரியாகும். நால்வரைத் தவிர எவரையும் சைவர்கள் ஆசாரியராகக் கொள்ளமுடியாது, என்பதால் இவர்களை சமய குரவர் என அழைப்பர். திருத்துறையூரினின்று சிதம்பரம் புறப்பட்ட நாவலூரர் வழியிலுள்ள பல தலங்களை தரிசித்துக்கொண்டே சென்றார். ஒருதலத்தைத் தரிசிக்கச் செல்லுவோர் வழியிலுள்ள தலங்களையும் தரிசித்துச் செல்லுவது சிறப்புடையதாகும் என்பது குறிப்பு நாவுக்கரசருக்குச் சூலை நோய் தந்து தடுத்தாட் கொண்டு அருளிய இடமான திருவதிகை அடைந்தார். அப்பர் பெருமான் அருள்பெற்ற இடமான அங்கு தன் பாதம்பட்டு மிதிக்க வேண்டாமென அஞ்சி வெளியிலேயே தங்கினார். சித்தவடம் என்ற ஒரு மடத்திலே ஆரூரர் படுத்துறங்கிய போது, அவரது தலையிலே பாதத்தை வைத்து ஒருகிழவர் படுத்திருந்தது கண்டு "ஐயா! தங்கள் கால்கள் என்தலை மீது படுகின்றன" என்ற போது, அப்பெரியவர் "வயதானவன் புரியவில்லை" என்று கூறினார். வேறு ஒருபுறம் தலைவைத்துப் படுத்தார் ஆரூரர். அப்போதும் பெரியவருடைய திருவடிகள் ஆரூரரின் தலைமேல்பட வெகுண்டு "யார் நீர்? ஏன் இப்படிச் செய்கின்றீர் "எனக் கேட்க „எம்மை நீர் அறியவில்லையா?' எனக்கூறிய பெரியவர் மறைந்தார். திருவதிகை வீரட்டானத்து இறைவரே இது செய்தவர் என அறிந்த ஆரூரர் பாடினார்.

தம்மானை அறியாத சாதியாருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டிலாடல்
உடையானை விடையானைக் கறைகொண் டகண்டத்து
அம்மான் தன் அடிக்கொண்டு என்முடிமேல் வைத்திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்

எம்மானை எறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போலியானே.

அப்பர் சுவாமிகள் மீது பக்தி கொண்டு அவரிருந்த இடத்தை மிதிக்க அஞ்சி மரியாதை காட்டிய ஆரூரருக்கு இறைவன் திருவடி தீட்சை செய்தார். திருவதிகைக்குள் அவர் செல்லவே இல்லை என்பது குறிப்பு. இச்சம்பவத்தை இராமலிங்க சுவாமிகள் "இறைவனே! உன் திருவடிக்கு ஆரூரரின் திருமுடி மேல் என்ன ஆசையோ!'

ஒருமுடிமேல் பிறைவைத்தோய்! அரிஅயன் ஒண்மறை தம்
பெருமுடி மேலுறவேண்ட வராது உனைப் பித்தன் என்ற
மருமுடியூரன் முடிமேல் மறுப்பவும் வந்தது அவர்
திருமுடி மேல் என்ன ஆசைகண்டாய் நின் திருவடிக்கே

என்றும், "ஆரூர்ப் பெருந்தகையே! இறைவன் திருவடி தங்கள் திருமுடிமேல் வைக்க என்ன பாக்கியம் செய்தீர்களோ!"

வேதமுதற் கலைகளெலாம் விரைந்து விரைந்து அநந்தமுறை
ஓத அவைக்கணுத் துணையும் உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினது திருப்பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம் யாதுரைத்தருளாய் வன்றொண்டப் பெருந்தகையே.

என்றும் பாடிப்பரவுகின்றார்.

திருவதிகைக்கு அருகில் ஓடும் திருக்கெடிலத்தில் நீராடி மகாபலியை வஞ்சித்த குற்றம் நீங்குவதற்கு திருமால் பூசித்த தலமாகிய திருமாணிக்குழியை வணங்கினார், திருத்தினைநகர் வணங்கித் தில்லையை அடைந்தார் போகும் வழியில் உள்ள நந்தவனங்களைக் கண்டு இறைவனுக்கு பூசனைக்காகும் மலர்களைத் தந்தவையாதலால் "நந்தனவனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்" என்கிறார் சேக்கிழார். தாழைமலரில் அமர்ந்தவண்டுகள் தாழையிலுள்ள வெண் மகரந்தப் பொடிகளைப் பூசிக் கொண்டதால் சிவனடியார்கள் போலக் காட்சிதந்தன. இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்தார் ஆரூரர் தில்லைத் திருக்கோயில் வடக்குவாயில் வழியாக நுழைந்தார். அவரைத் தில்லையிலுள்ள அடியார்கள் எதிர்கொண்டு வணங்க ஆரூரர் அவர்களை வணங்கினார். யார் யாரை முன்னால் வணங்கினர் என்பது அறிய முடியவில்லை. "அடியார் அவர்களோ

நம்பி ஆரூரர் தாமோ? முன் பிறைஞ்சினர்யாவர் என்று அறியா முறைமையால்" வணங்கினர் என்பது கவிஞரின் திருவாக்கு நடராஜர் திருமுன் திருமால், அயன், பிரமன், இந்திரன், தேவர், முனிவர், சிவனடியார், கணநாதர் ஆகிய வரிசையில் சென்றனர். கணநாதர் சிவனடியார் பின் சென்றதால் அவர் களுடன் ஒக்க நுழைந்தனர். (முன்னால் சென்றவர் நந்தி தேவர் கைப்பிரம்பால் அடிபெற்றுத் திளைத்தனர். யமதரும னின் கைத்தடியால் அடிவாங்கினால் துன்பமே கிடைக்கும். நந்திதன் பிரம்படிபட்டால், நின் நல்லடியான திருவடி கிடைக்கும்"

அந்தகன் வன்கைத் தடியடிமுடி யேற்று அளற்றியான முந்துரு வண்ணம்
நந்திதன் மென்கைப் பிரம்படி ஏற்றுன்நல்லடி அழுந்து மாறருள்வாய்
சந்தமுத் தருப்பி மரகதங் காய்த்துத் தயங்கு செம்பவழமே பழுக்கும்
கந்திகள் மலிந்த காமரு சோலைக்கலை சைவாழ் சிதம்பரே சுரனே,

என்று மகாவித்துவான் பிள்ளையவர்கள் தமது சிதம்பரேச் சுரர் மாலையில் கூறுகிறர்) வேதத்தின் ஆரம்பத்திலும் நடுவிலும் முடிவிலும் உள்ள ஓம் எனும் பிரணவம். அன்பர் கள் மனத்திலும் உள்ளது. அதுவே திருச்சிற்றம்பலமாயிற்று அங்கு அடைந்து இறைவன் ஆடும் பெருமையைக் கண்ட ஆரூரரின் குவிந்த கைகள் களிப்படைந்தனவா, கண்ட கண் களா எது இன்புற்றது எனப் புரியவில்லை! மெய் வாய் மூக்கு செவி ஆகியவை வேலை செய்யவேயில்லை! கண்கள் இறை வனைக் கண்டதும் அப்படியே நின்று பிரமித்தன! சித்தம் என்பது ஒரு பொருளை என்ன வென்று ஆராயும். புத்தி அப்பொருள் சரியா பிழையா என யோசிக்கும். மனம் அப் பொருளைப் பெறுவோமா வேண்டாமா என நினைக்கும். அகங்காரம் உடனே செயல்படும், சுந்தரருக்கு நடராஜ மூர்த் தியைக் கண்டு பிரமித்த சிந்தை வேறு காரணங்களை வேலை செய்ய விடவில்லை எல்லாக் குணங்களையும் மீறி சத்வகுணம் மேலோங்கி நின்றது. ஆதி அந்தமில்லாது என்றும் ஆடுவதால் எல்லையில்லாக் கூத்தாகவும், கண்டவரைக் களிக்கச் செய்யும் தன்மையால் ஆனந்தக் கூத்தாகவும், எவருக்கும் பெரியோ னை இறைவனது கூத்தானதால் பெருங் கூத்தாகவும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்ரகித்தல்

ஆகிய ஐம்பெருங் காரியங்களையும் செய்வதற்காக ஒற்றைக் காலில் நின்று ஆடும் தன்மையில் தனிப்பெருங் கூத்தாகவும் விளங்கியதால் "ஆடும் எல்லையில் தனிப்பெருங் கூத்து எனச் சேக்கிழார் பெருமான் இதைக் குறிப்பிடுகின்றார். இப்படிப் பட்ட ஆனந்தக் காட்சி கண்டு சுந்தரர் இடையறாத இன்ப நிலை கொண்டு பிரமித்து நின்றார்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும்
 கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம்ஒரு மூன்றும்
 திருந்து சாத்து விகமேயாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
 எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
 மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

குமரகுருபரர் நடராசப் பெருமானை அம்பலக் கூத்தன், அற்புதக் கூத்தன், வைதிகக் கூத்தன் என்றெல்லாம் குறிப்பிட்டு மகிழ்வார். "ஐந்தும் பேரறிவும்" பாடல் மிக அழகிய பாடல் தங்க ஏட்டில் நவரத்தினங்களால் இழைத்துப் படிக்க வேண்டிய பாடல். தொய்யற் சிந்தையராகிய யாம் இதை என்னென்று புகழ்வது! சேக்கிழார் பெருமானின் திருநாமம் என்றும் வாழ்ந்து நமக்கு அருளட்டும்.

இறைவனை நடராசப் பெருமானின் திருமுடியிலிருந்த நிலா ஒரு கலங்கரை விளக்கம் மாதிரி இருந்தது, அவர் இருக்குமிடத்திற்குத் தன்னையழைத்து அருள் செய்தது கண்டு "எனக்கு இப்பிறவியே பெருமையுடையது" என மகிழ்ந்து, அறியமுடியாத களிப்புத்தரும் பதிகம் பாடினார். அந்நிலையில் "திருவாரூருக்கு வருக" என வாக்குக் கிடைக்க, நடராஜப் பெருமானை வணங்கி சிதம்பரம் விட்டுப் புறப்பட்டுக் கொள்ளிட நதியைத் தாண்டி அம்மை பால் கிடைத்து அருள் பெற்ற ஞானசம்பந்தர் பிறந்த சீகாழிப் பதியை மிதிக்க அஞ்சி வலம் வந்தபோது இறைவன் காட்சியளித்தார்.

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
 தன்னருள் தந்தஎந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
 வருபுனல் சடையிடை வைத்த எம்மானை

ஏதிலென் மனத்துக் கோரிருப் புண்ட நீரை
எண்வகை யொருவனை எங்கள் பிரானை
காதில் வெண்குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர் கண்டு கொண்டேனே.

என்று பதிகம்பாடி வணங்கினார். திருநாவுக்கரசர் திருப்பணி செய்த திருவதிகையை மிதிக்க அஞ்சிய சுந்தரருக்கு இறைவன் திருவடி தீட்சையே செய்தார். ஞானசம்பந்தர் அவதரித்த சீகாழிப் பதியை மிதிக்க அஞ்சியதால் சுந்தருக்கு இறைவனது காட்சியே கிடைத்தது. அடியார்களைப் போற்றினால் இறைவன் நேரில் வந்து அருளுகிறார் என்பது குறிப்பு.

திருப்புன்கூர், அம்பர்மாகாளம் முதலான தலங்களைக் கடந்து தரிசித்து வந்தார். அம்பர் மாகாளம் என்பது அரசலாற்றின் கரையில் உள்ளது திருமாலாகிய அரி சொற்படி அவர் பூசை செய்வதற்காக காவிரியினின்று பிரிந்து வந்த அரிசொல் ஆறு என்பது இன்று நம்மவர் வாக்கில் அரசலாருகி விட்டது. திருவாரூர் மக்களுக்கு,

"ஆராத காதலின் நம் ஆரூரன் நாம் அழைக்க
வாரா நின்ருன்! அவனை மகிழ்ந்து எதிர் கொள்வீர்"

என இறைவன் கட்டளையிட்டபடி, ஆரூரர் எதிர் கொண்டழைக்கப் பட்டார். சிவனடியார்கள் "என்னையும் எம்பெருமான் ஆட்கொண்டு அருளுவாரோ?" எனத் திருவுளம் அறியும்படி பதிகம் பாடினார்.

எந்தை யிருப்பதும் ஆரூர்: அவர் எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தை செயும்திறம் வல்லான் திருமருவும் திரள் தோளான்
மந்த முழவமியம்பும் வளவயல் நாவலாரூரன்
சந்தமிசை யொடும் வல்லார் தாம்புக ழெய்துவர் தாமே.

திருக்கோயிலுள் புகுந்து பூங்கோயில் கொண்ட பிரானை வணங்கி, தான் உடல் எடுத்த பயன் பெற்றார். அவரது பெரும் அன்பு கண்ட ஆரூர்ப் பெருமான் "உனக்கு நம்மையே தோழனுகத் தந்தோம். அன்று உன்னைத் தடுத்தாட் கொண்ட போதிருந்த திருமணக் கோலத்துடன் உன் ஆசை தீருமட்டும் இன்புற்று வாழ்வாயாக" எனக் கூறியருளினார்.

வாழிய மாமறைப் புற்றிடங் கொண்
மன்னவனூர் அருளால் ஓர் வாக்கு
தோழமையாக உனக்கு நம்மைத்
தந்தனம் நாமுன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம்
என்றும் புனைந்து நின்வேட்கை தீர
வாழி மண்மேல் விளையாடுவாய் என்று
ஆரூரர் கேட்க எழுந்த தன்றே.

"இறைவனே! உன் கருணையே கருணை" எனஉருகிப் பணிந்த ஆரூரர், வன்றொண்டர் என்ற பெயருடன் "தம்பிரான் தோழர்" என்றும் அழைக்கப் பெற்றார்.

கற்பனைக் களஞ்சியம் என அழைக்கப்பட்ட ஸ்ரீ சிவப் பிரகாச சுவாமிகள் தமது நால்வர் நான் மணிமாலையில் "சிவ பெருமான் பணக்காரனுன தோழன் வேண்டுமென்று எண்ணிய இறைவன் குபேரனை ஏற்றுக் கொண்டார். கல்விச் செல்வமுடைய ஒரு நண்பர் வேண்டுமென்பதற்கு தங்களுக்குத் தோழமை பூண்டார் போலும்!"

அறிந்து செல்வ முடையானும் அளகைப்
பதியாற் றேழமை கொண்டு
உறழ்ந்த கல்வி யுடையானு மொருவன்
வேண்டு மென விருந்து
துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா!
நினைத் தோழமை கொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும்
நுதற் கட் பெருமானே!

என்று பாடுகிறார். அடியார் பெருமை அவன் பெருமை யன்றே!

—திருச்சிற்றம்பலம்—

# அண்ணமலைப் பல்கலைக் கழகம்

## தமிழ்த் துறையாசிரியர் எட்டாவது கருத்தரங்கு

## இரண்டாம் சிலப்பதிகாரக் கருத்தகம்

அண்ணமலைநகர் பிப். 17. அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் எட்டாவது கருத்தரங்கு பிப்பிரவரி 16, 17 ஆகிய இரு நாட்களிலும் அண்ணமலை நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முன் நிகழ்ந்த ஏழாவது கருத்தரங்கும், சிலப்பதிகாரக் காப்பியம் பற்றியது; எட்டாவது கருத்தரங்கும் அக்காப்பியம் பற்றியே நிகழ்ந்தது. சிலப்பதிகாரத்தின் கதைக்கரு, திணைச்செய்தி, மன்னர்கள், புராணக்கூறுகள், கிளைக்கதைகள் முதலாய பல கூறுகளில் இக்கருத்தரங்கில் சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகள் ஆராயப் பட்டன. தமிழ்த்துறை ஆசிரியர்கள் பதின்மூவர் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர். பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் மாணவ மாணவியரும் பெருந்திரளாக வந்திருந்து இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தொடக்கத்தில் இந்திய மொழிப்புல முதன்மையர், தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் வரவேற்புரையில் ஆராய்ச்சி ஆற்றல் எல்லா மக்கட்கும் இயல்பில் அமைந்து கிடக்கின்றது; அந்த ஆற்றலை வெளிப் படுத்துதற்குக் கருத்தரங்குகள் வாய்ப்பளிக்கின்றன எனவும் சிந்தனை என்னும் நீர், குட்டையாகத் தேங்கிக் கிடக்காமல் ஓடிப்பாயும் முறையில் கல்வி நிலையங்கள் பயிற்சியளிக்க வேண்டுமெனவும், தொடக்கப்பள்ளி உயர்நிலைப் பள்ளிகளில் கூட சிந்தனை வளர்ச்சிக்கு வாய்ப்பு நல்க வேண்டுமெனவும் சிந்தனைக்கு எத்துறையும் எப்பள்ளியும் விலக்காகக் கூடாது எனவும் வலியுறுத்தினர்.

பல்கலைக் கழக அறிவியற் புல முதன்மையர், விலங்கியற் பேராசிரியர் டாக்டர் பி. கோவிந்தன் இக்கருத்தரங்கைத் தொடங்கிவைத்து 19-ம் நூற்றுண்டில் இங்கிலாந்து நாட்டில் தோன்றிய ஆராய்ச்சிக் கழகத்திற்கு இத்தமிழ் கருத்தரங்கை ஒப்பிடலாம் எனவும், பல்கலைக் கழகத்தின் பல்புல மாணவர்

களும் இதில் கலந்து கொள்வது அவர்கள் தமிழ் அன்பையும் ஆராய்ச்சி ஆர்வத்தையும் காட்டுவதாகும் எனவும், இலக்கியத்தை ஆராய்வது போலத் தமிழில் வழங்கும் அறிவியற் கலைச் சொற்களையும் இத்தகைய அரங்குகள் ஆராய்ந்து முடிபு காண வேண்டும் என்றும் சிறிய வடிவில் அறிவியல் தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் எனவும் மொழிந்தனர். தொடக்க விழாவின் இறுதியில் திரு. சிவ. திருநாவுக்கரசு நன்றி கூறினர்.

கருத்தரங்கின் மூற்பகுதி 16-2-74 பிற்பகல் துணைப் பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி தலைமையில்தொடங்கியது. திரு. அழ பழநியப்பன் 'சிலம்பில் சோழன்' என்னும் கட்டுரையில் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறும் சோழமன்னன் கரிகாற் பெருவளத்தானே என்றும், மாதவி அரங்கேறிய காலத்து அவனே அரசனுக இருந்தான் என்றும் கூறினர். திரு. இரா. இராமலிங்கம் 'சிலம்பின் கதைக் கரு' என்னும் தலைப்பில் செல்வாக்குப் பெற்ற காவியக் கதைகளை வடிவம் மாற்றியும் காலத்திற் கேற்பக் கருத்து மாற்றியும்புதுப்பித்தும் தனி ஒரு நிகழ்ச்சியை விரித்தும் பிற்கால எழுத்தாளர்கள் மேற்கொள்கின்றனர் எனவும் உரைத்தார். திரு. உ. பழநி 'சிலம்பில் சேரன்' என்னும் ஆய்வுரையில் ஐந்தாம் பதிற்றுப் பத்து அதன் பதிகம் சிலப்பதிகாரம் ஆகிய மூன்றிலும் வரும். வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்ந்து கண்ணகிக்குக் கல்லெடுத்த செங்குட்டுவனே பரணர் பாடிய சேர மன்னன் என்று கூறினர்.

17-2-74 முற்பகல் கருத்தரங்கிற்குத் துணைப் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனர் தலைமையேற்றார். திரு. சு. சாமிஐயா 'சிலம்பில் புறத்திணை' என்ற ஆய்வுரையில் தொல்காப்பியம் சிலப்பதிகாரம் வெண்பாமாலை மூன்றையும் ஒப்பிட்டுத் தொல்காப்பியர் காலத்திற்கும் பின்வந்த ஐயனரிதனர் காலத்திற்கும் இடைப்பட்ட புறப்பொருள் துறை வளர்ச்சிகளைச் செய்தவர் இளங்கோ எனப் பாராட்டினர். திரு. சி. வேங்கடபதி 'பத்தினிப் பரவல்' என்னும் ஆய்வுத் தாளில் சிலப்பதிகாரத்தின் குறிக்கோள் பதிகம் கூறும் மூன்று பொருளாக இருந்தாலும், 'பத்தினித் தொழுகையே காப்பியம் முழு

வதும் காணப்படும் முதற் குறிக்கோளாகும் என்று விரித்துரைத்தார். திரு. சிவ. திருநாவுக்கரசு 'சிலம்பில் புகார்' என்ற தம் ஆய்வுரையில் இளங்கோ புகார் நகரை வாழ்த்துகின்ற வாழ்த்திற்கும் பின்வரும் கதைப்போக்கிற்கும் முரண்பாடுகள் உள எனவும் புகார் நாட்டிய நிகழ்ச்சியும், மதுரை நாட்டிய நிகழ்ச்சியும் கோவலன் அவல முடிவிற்குஅடிப்படைநிகழ்ச்சிகளாகும் எனவும் எடுத்துரைத்தார். திரு க இராமசந்திரன் 'மூன்றும் மூன்றும்' என்ற தலைப்பில் சமயப் பொதுமை வேட்டுவ வரிக்காதையிலும் சிறந்து விளங்குவதைப் புலப்படுத்தினர். திரு. ஆறு. அழகப்பன் சிலம்புத் தொடராகிய 'நான் பத்தினியானல்' என்பதைத் தலைப்பாகக் கொண்டு பாண்டியன் தன்தவற்றை எண்ணி இறந்தபின்னும் கண்ணகி மதுரையை எரித்தது பொருந்துமா? எனவும் கண்ணகி ஒரு முலை குறைத்த செய்திக்கு ஏதும் மரபுண்டா எனவும் இரு வினக்களை எழுப்பினர். பத்தினி எழுவரின் கதைகளை முன்னே அறிந்தவள் ஆதலால் அவர்களைப்போல் தானும் ஆக வேண்டும் என்ற தூண்டுதல் கண்ணகிக்கு இருந்திருக்க வேண்டும் எனவும் உறுப்பைக் குறைத்துக் கொள்ளுதல் சமணப் பழக்கமாக இருக்கலாம் எனவும் கூறினர்

17-2-74 பிற்பகல் கருத்தரங்கிற்குத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமையேற்றார். 'சிலம்பில் புராணக் கூறுகள்' என்ற ஆய்வுரை படித்த திரு சுப. இராமநாதன் திங்களைப் பாண்டியன் குலமுதல்வனுகக் கூறுவதும், ஞாயிற்றைச் சோழர் குல முதல்வனுகக் கூறுவதும் தமிழ் அரசர்களைச் சங்ககாலம் போலத்தெய்வங்களுக்கு ஒப்பிட்டுக் கூருது தெய்வங்களாகவே கூறுவதும் இன்ன பிறவும் சிலம்பில் காணப்படும் புராணப் பகுதிகள் என்று எடுத்துக்காட்டினர். திரு. வே. செயராமன் 'இளங்கோவடிகளின் சிறப்பியல் புகள்' என்ற கட்டுரைகள் கருத்துக்களைப் பாத்திர வாயிலாகவே உணர்தல், பரத்தையான மாதவியை இழித்துக் கூருமை தமிழக ஆரிய இலங்கை நாட்டு மன்னர்களை ஒன்றுபடுத்துதல், தம் சமயத்தை வெளிப்படக் கூருமை ஆகிய இளங்கோவின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தினர். திரு. பி. கே. சார்ச்சு, 'சிலம்பில் நான்காம் செய்தி' என்ற தலைப்பில் இல்ல

றம் கூறும் சிலப்பதிகாரம் இன்பக் காட்சிகளோடு துன்பத்தில் தோன்றும் அன்புக் காட்சிகளையும் எடுத்துக் கூறுவது எனவும் துன்பமே அன்பின் உறைவிடம் எனவும் துயரிடை அன்பு துலக்குறும் என்பதை நான்காம் செய்தியாகக் கொள்ளலாம் என்றும் கூறினர். திரு. ந. ராமலிங்கம் 'சிலம்பு மணம் ஐந்திணை நெறியா' என்ற தலைப்பில் கோவலன் சாவக நோன்பி என்று சொல்லப்படுதலால் அவன் மனம் சமண சமயச் சார்புடையதாக இருக்கலாம் எனக்குறிப்பிட்டார். திரு சோம இளவரசு 'சிலம்பில் கிளைக்கதைகள்' என்னும் கட்டுரையில் சிலப்பதிகாரத்தில் உவமையாக, மேற்கோளாக, விளக்கமாக பழம்பிறப்பாக, புராணமாக வருகின்ற கதைகளை எடுத்துக் காட்டித் தேவந்தி வம்பப்பரத்தன், மாங்காட்டு மறையோன் தெய்வச்சாலினி என்ற நால்வரின் கதைகளுமே காப்பிய வளர்ச்சிக்கும் பாத்திரங்களின் மன வளர்ச்சிக்கும் துணையாக அமைந்த கிளைக்கதைகள் எனப் புலப்படுத்தினர்.

தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் தம் முடிவுரையில் இவ்வாண்டு இருமுறை நடந்த சிலப்பதிகாரக் கருத்தகங்களில் திணை, சமயம், பாத்திரம், வரலாறு, மொழியியல், யாப்பு, காப்பிய அமைப்பு, நாகரிகம் முதலான பல நோக்கில் இப்பெருங் காப்பியத்தைத் தமிழ்த்துறை ஆராய்ந்துள்ளது எனவும், சிலப்பதிகாரத்தின் காலத்தை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து ஒருமுடிவு காணவேண்டும் எனவும் இம் முடிவு இலக்கியத்திலும் சமயத்திலும் வரலாற்றிலும் உள்ள சிக்கல்களை ஒழுங்குபடுத்தும் எனவும் கணவனின் துன்பத்தை முழுதும் தாங்கித் தன் துன்பத்தை அடக்கிக் கொண்டதே கண்ணகியின் கற்பில் அமைந்த தெய்வத் தன்மை எனவும், இத்தெய்வத் தன்மையை முதலில் எடுத்துக் காட்டியவர் கவுந்தியடிகள் எனவும் எடுத்துரைத்தார். திரு, ந. வீ. செயராமன் நன்றிகூறக் கருத்தரங்கு முடிவுற்றது.

[சிவ சிவ

# உண்மைச் சமயமும், உண்மைத் தெய்வமும்,

சைவப்புலவர். புலவர். திரு. மு. பரசுராமன் அவர்கள்
செஞ்சி. (தெ. ஆ. மா.)

## முகவுரை:

''சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில்சார்
சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வமில்லை''

(திருவருணைக் கலம்பகம்)

''ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ''

(திருவாசகம்)

''பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே'' (திருவருட்பா)

எனவே வளரும் சமயங்கள் எனப்படும் ஆறுகள் எல்லாம் முடிவிலே ஆர்க்கின்ற அந்தமும் ஆதியுமிலாக் கருணையாம் கடலைச் சார்கின்றன, எனினும் எம்சமயம் தான் உண்மை வாய்ந்தது; உயர்ந்தது என்று சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்திடுவர். மேலும், எம்சமயத் தெய்வமே உண்மைத் தெய்வம்; முதற்றெய்வமென்றும் அரற்றி மலைவர். எனினும், உண்மைச் சமயம் எதுவென்றும் உண்மைத் தெய்வம்எதுஎன்றும் காண்டல் அரிது.இதனைத்தெளிய, சமன் செய்து சீர்தூக்கி. நம் சைவத் திருமுறைகளும், சாத்திரங்களும் நன்கியம்பும்.

## உண்மைச் சமயம் உணர்தல்:

சிவஞான சித்தியார் அருளிய, அருணந்தியார்,

ஓதுசமயங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல் யாது இங்கு என்னில்
இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கது இன்றி
நீதியினல் இவைஎல்லாம் ஓரிடத்தே காண
நிற்பது யாதொரு சமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினல் இவைஎல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் அவைஇரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்''

[சூத்திரம்–8–செய்–13[

என்று சைவ சித்தாந்தமே உண்மைச் சமயம் என்று அறிவுறுத்துகிருர். எனவே, முன்முன் உள்ள சமயங்கள் பின்பின் உள்ள சமயங்களால் வாதிக்கப்படும். வாதிக்கப்படுவது பூருவ பக்கம் எனப்படும். வாதிப்பது சித்தாந்தமாம், சைவ சித்தாந்தம், மற்ற எச்சமயங்களையும், பூர்வபக்கம் பண்ணி நிற்றலானும், அதனைப் பூர்வ பக்கம் பண்ணுதற்கு ஒருசமயமும் இன்மையானும் அதுவே உண்மைச் சமயமாய் சித்தாந்தம் எனப்படும். அன்றியும்,

''ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றுஇது தீதுஇது என்று உரையாளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே.

என்று திருமந்திரமும் அறுசமயப் போக்கினை அறிவுறுத்துகிறது.

மேலும்,

''சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியில்
பவனவன் வைத்த பழிவழி நாடி''

(திருமந்திரம் 1560)

''அரனெறி யாவது அறிந்தேனும் நானும்
சிலநெறி தேடித் திரிந்த அந்நாளும்'' (1562)

''சைவ சமயத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு'' (1567)

''ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்
ஆய்ந்தறியா வண்ணம் நின்ற அரனெறி'' (1571)

என்னும் திருப்பாடல்களால் திருமூலரும், சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியாம் சைவசமய நெறியே உண்மை நெறி என்று முணர்த்துவதை அறியலாம்.

இதனாலன்றோ, திருவருணைக் கலம்பகமும்,

"சைவத்தின் மேற்சமயம் வேறிலை" என நவின்றன போலும்!

எனவே, சமய குரவர்கள் வளர்த்திட்ட அருள்நெறியாம் சிவ நெறியே உண்மை நெறி என்றும், அதுவே உண்மைச்

சமயமாய்த் தோன்று தொட்டு, சிந்துவெளி நாகரீகம் முதல் விளங்குவதையும் அறியலாம்.

உண்மைத் தெய்வம் ஓர்தல்:

''புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டு நிற்க''

எனும் மாணிக்கவாசகரின் மணிமொழிக்கேற்ப, அமணர் அருகனை வணங்கினும், பௌத்தர் புத்தரை வணங்கினும், கிருத்துவர் இயேசுவை வணங்கினும், முகமதியர் அல்லாவை வணங்கினும், வைணவர் திருமாலை வணங்கினும் அல்லது எச் சமயத்தார் எத்தெய்வத்தை எப்பரிசாயினும் ஏத்தினும் அத் தெய்வமாய் அப்பரிசாய் வந்து அருளுவன் உமையொரு பாகனும் சிவபெருமானே ஆவன். எனவே, அவனே உண்மைத் தெய்வம்; அவனே, ஒருவனுயும், அரி, அயன், அரன் என மூவராயும், மூவர்க்கு முதலாகியும், ஐம்பூதங்களாகியும் நிற்கின்றான் என்பதை நம் சைவத் திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் பரக்கக் கிடப்பதைக் காணுங்கால் உண்மை புலனும். இதனை, அருணந்தி தேவநாயனுர் தாமருளிய சிவ ஞான சித்தியாரில்,

''யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னுர்தாம்
வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும்
பிறக்கு மேல் வினையும் செய்யும்
ஆதலான் இவை யிலாதான்
அறிந்தருள் செய்வன் அன்றே''

(சூத்-2–செய்–25)

''இங்கு நாம் சிலர்க்குப் பூசை
இயற்றினுல் இவர்க ளோவந்
தங்குவான் தருவார் அன்றேல்
அத்தெய்வம் அத்தனைக் காண்
எங்குவாழ் தெய்வம் எல்லாம்
இறைவன் ஆணையினுல் நிற்ப(து)
அங்கு நாம் செய்யும் செய்திக்
காணைவைப் பால ளிப்பன்''

(சூத்–2–செய்-26)

"காண்பவன் சிவனே ஆனுல்
அவனடிக்கு அன்பு செய்கை
மாண்பறம் அரன்தன் பாதம்
மறந்து செய் அறங்கள் எல்லாம்
வீண்செயல் இறைவன் சொன்ன விதி"

(சூத்-2-செய்-27)

என்றுணர்த்து மாற்ருன் மாதொரு பாகனே முதற்றெய்வம்; உண்மைத் தெய்வமென்றும் தெளியலாம்.

இதனுலன்ருே, திருமூல நாயஞரும்,

"சிவனெடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனெடு ஒப்பார் இங்கு யாவருமில்லை"

"அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை"

"அயலும் புடையும் எம்ஆதியை நோக்கில்
இயலும் பெருந் தெய்வம் யாதும் ஒன்றில்லை"

"தேசம் கலந்தொரு தேவனென்று எண்ணினும்
ஈசன் உறவுக்கு எதிரில்லை தானே"

"ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனை"

"வானவர் என்றும் மனிதர் இவரென்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோரும் தனித் தெய்வம் மற்றில்லை"

"எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்திஞல்
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே"

என்னும் திருமொழிகளால் உமையொரு பாகனே முதற்றெய்வம்; உண்மைத் தெய்வம் என்று முணர்த்து மாற்ருன் தெளியலாம்.

இதனுலன்ருே, திருவள்ளுவரும், கடவுள் வாழ்த்தில்,

"மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்னும் குறளில் முக்காலத்திற்குமுரிய கடவுளை, 'ஏகினுன்' என்று இறந்த காலத்தாற் குறிப்பித்துள்ளார். மேலும், இதனை விளக்கமாக அக்குறளுக்குப் பொருள்எழுதும் காஞ்சி புரப் பெரியவராம் பரிமேலழகர் "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து

சேரலின் ஏகினுன் என இறந்த காலத்தால் குறிப்பித்தார். என்னை? வாரா க் காலத்தும், நிகழுங் காலத்தும், ஓராங்கு வரு உம் வினைச்சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனுர் புலவர்'' என்பது ஒத்தாகலின்! என்று குறிப்பித்துள்ளமையால், உள்ளக் கமலத்தின் கண் விரைந்து வந்தருளல் உமையொரு பாகனே என்றும் தெளியலாம்,

மேலும், இதனையே திருவருட் பிரகாச வள்ளலாரும்,

''எங்கேமெய் யன்பருளர் அங்கே நலந்தர
எழுந்தருளும் வண்மைப் பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம்
அன்றே யிரங்கி ஈந்து அருளும் பதம்''

என்று திருவடிப் புகழ்ச்சியில் தெளிவுறுத்தினமையாலும் தெளியலாம். அன்றியும், திருவாசகத்தில் மணிவாசகப் பெம் மானும்

''ஏகன் அநேகன் இறைவன்''

''தென்னுடு உடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி''

''வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூருயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசன்இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும் வந்தருளி''

''உள்ளேன் பிறதெய்வம் உன்னை யல்லாது எங்கள்
உத்தமனே''

''ஒருவன் என்னும் ஒருவன் காண்க''

''சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்''

''தேவ தேவன் மெய்ச் சேவகன்''

என்னும் மணிமொழிகளால் அவ்வுண்மையை உணர்த்து மாற்ருனும் தெளியலாம்.

மேலும், உண்மைத் தெய்வத்தின் உண்மைவடிவாம் தொன்மை வடிவையும், மணிவாசகர்,

''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ''

என்னும் பாடலால் விளக்கியுள்ளமை அறிந்து மகிழற்பால தாம்.

ஒரு சிந்தனை:

மற்றும், சைவசமயத் தெய்வங்களாகிய, முருகன், ஆனை முகக் கடவுள், கலைமகள், திருமகள் ஆகியோர் தெய்வமாவாரோ எனின்? தெய்வமாவார் என்க. என்னை? முருகன், ஆனை முகக் கடவுள் உள்ளிட்டோர் சிவபெருமானின் கூறே என்க இவை முருகனின் திருப்பிறப்பு, விநாயகரின் திருப்பிறப்பு ஆகிய வரலாறுகளால் அறிதல் என்க. மற்றும் கலைமகள், திருமகள் உள்ளிட்டோர் உமையம்மையின் கூறு என்க! மற்று, உமையம்மையும் சிவனொடு கலந்த கூறு என்க! என்னை?

''சிவன் சத்தி தன்னை ஈன்றும்
சத்தி தான் சிவத்தை ஈன்றும்
உவந்து இருவரும் புணர்ந்திங்கு
உலகுயிர் எல்லாம் ஈன்றும்''

என்பது சிவஞான சித்தியாராகலின், அன்றியும்,

''விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்
நாராயணனாய் நதிச்சடை முடியனாய்
பிறநாட்டிலிருப் போர் பெயர் பலகூறி
அல்லா! யெஹோவா! எனத்தொழுது அன்புறும்
தேவரும் தானாய் திருமகள் பாரதி
உமையெனும் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாம் காக்கும் ஒருவன்''

என்பதும் பாரதியாரின் பொன் மொழியன்றோ!

முடிப்புரை:-

மேற்கண்ட உண்மைகளின் முடிபாகவே நடுநிலைச் சான்றோரும், சமயப் பொறைச் சான்றோருமாகிய திருமூல நாயனார், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றது சைவ சித்தாந்த நெறியையும் உமையொரு பாகனையுமேயாம். வள்ளலாரின் கொள்கைகளும், இவற்றின் அடிப்படையேயாம் இவ்வுண்மைகளை எல்லாம் தெளிந்தோமாயின், எச்சமயத் தாரிடையேயும் அழுக்காறு உள்ளிட்ட அவல நிலைகளைக் காணாது, ஒற்றுமையையே காணலாம் என்பது திண்ணம். இதனால் சைவசமய நெறி வளர்ந்து கொடுக்கும் தன்மையது

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# "அருட் கொண்டல்"

திருமதி: ப. உமாதேவி அவர்கள்:
பாரதிதாசன் மகளிர் கல்லூரி புதுவை-1

அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன் முட்டையுள் இருக்கும் கருவிற்கும், கல்லினுள் இருக்கும் தேரைக்கும் கூட உணவளித்துக் காக்கும் அருள் உள்ளம் கொண்டவன். அவன் காண்டற்கு அரியன், கண்டுவிட்ட பின் போ எளியனுய் அடியார்க்கு அடியனுய் இருப்பவன். இத்த கைய சிறப்பும். பெருமையும் கொண்டவன் அடியார் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல்களும் அருளிச் செய்த அற்புதங்களும் கணக்கற்றவை. அப்படிச் செய்யப்பட்டவை களும் எளிய மக்களுக்கு மட்டுமன்றி, அன்பு கொண்ட அடியார்களின் இதயகமலத்திற்கு ஏற்புடைய இன்ப ஊற்றாகவும் அன்றே விளங்குகின்றன. அத்தகையச் சிறப்பு பெற்ற அவனுடைய திருவிளையாடல்களையும், அதன் மூலம் அவனது கருணை வெள்ளத்தையும் காண்போம்.

இறைவன் தன்னுடைய திருவிளையாடல்களைநிகழ்த்திய இடம் பலவகைச் சிறப்பும், பெருமையும் பெற்றுப் பொலியும் மதுரை மாநகரமாகும். இந்தச் சிறப்புக்களும் இறைவன் அங்கு வந்த பின்னரே என்று கூறின் அது மிகையாகாது, மதுரையில் மக்கள் மனங்குளிர, அறந்தழைக்க, அடியார்க

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்றுமறிபலாம். இவற்றால் உண்மைச் சமயம், சிவனவன் வைத்த சைவசமயமே என்றும், உண்மைத் தெய்வம் முக்கட் பெருமான் உமையொரு பாகனும் சிவபெருமானே என்றும் தெளிவோமாக!

திருச்சிற்றம்பலம்

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்தடி யேற்கருள் செய்தான்
ஊனரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''

களெல்லாம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்திட, எளிய மானிட வடிவம் கொண்டு தன் சிறப்புக்களையும், பெருமைகளையும் விடுத்துப் பூவுலகில் மன்னனாகி ஆட்சி புரிந்த சொக்கேசர் தியாகம் செய்ய நேரிட்டது ஒன்றா? இரண்டா? பலவன்றோ? என்று கேட்டு உருகுகின்றார் குமரகுருபரர். அந்த உருக்க மானது,

விண்ணரசும் பிறவரசும் சிலரெய்த விடுத்தொரு நீ
பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே
தேம்பழுத்த கற்பகத்தின் நறுந்தெரியல் சிலர்க்கமைத்து
வேம்பழுத்த நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே
வானேறுஞ் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த
மீனேறே வானேறும் விடுத்தடி களெடுப்பதே
விண்ணாறு தலைமடுப்ப நனையா நீவிரைப் பொருநைத்
தண்ணாறு குடைந்து வைகைத் தண்டுறையும் படிந்தனையே

என்று கேட்கும் தீந்தமிழ்ப் பாடலாக வெளிப்படுகின்றது. எல்லார்க்கும் எளியவனாக எம்பெருமான் வந்தது அடியார் பொருட்டன்றோ?

மன்னனாகி மாட்சிமைப் பட்ட இறைவன் அடியார் இன்னல்களையத் தன்னையே இன்னல்படுத்திக் கொண்டான். வானாய், நிலனாய், மதியாய், கதிராய், ஊனாய், உயிராய் உலகில் நிறைந்துள்ள இறைவன் தன் திருவடி நோக நடந்ததும், திருமுடி வருந்த மண்சுமந்ததும், அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னை வந்தி என்பாளின் தலையன்பில் கட்டுப் பட்டன்றோ? அந்த அன்புதானே வேதமுணர்த்திய அழகிய செம்பவள வாயால் கருந்துணியில் இட்ட வெண்பிட்டினை யுண்ணும்படிச் செய்தது. அதுமட்டுமா உமையம்மையிடம் வைத்த அன்பும் அருளும் அடியார்களிடமும் உண்டு என் பதைக் காட்டவன்றோ இறைவன் வளைச் செட்டியாகித்தாரு காவன முனிவர்களின் பத்தினியரின் சாபத்தைத் தீர்த்து வைத்தான். அந்த அருளில் எள்ளளவு கூடக் குறையாமல் தன்னால் சபிக்கப்பட்டு வலைஞர் குலத்தில் தோன்றியிருந்த பார்வதி தேவியை மீட்க ஊன் வலையில் அகப்பட்டார்க்குட் படாது நிற்பவனாகிய இறைவன் தன் மலை போன்ற தோளில் வலையினைச் சுமந்து வந்தான்.

அடியார்களுக்கு மட்டுமன்றி தேவர்களுக்கும் அருள் தந்தான். ஆனால் ஆணவம் கொண்டவர்களை அவன் தண்டிக்காமல் என்றும் விட்டதில்லை, தன்னை மதிக்காது, ஆணவம் கொண்டிருந்த பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளியெடுத்து ஆணவத்தை யடக்கினான். இதனைக் குமரகுருபரர்,

ஆனேறும் வலனுயர்த்த வழகியசொக் கர்க்கிதுவு
மழகி தேயோ
கானேறுங் குழல்சரியக் கர்ப்பூர வல்லிதலை
கவிழ்ந்து நிற்ப
ஊனேறு முடைத் தலையிற் கடைப்பலி கொண் டூர்புக்
குழலு மாறே.

என்று வஞ்சப் புகழ்ச்சியாகக் கேட்கின்றார். அதனால் பிரமனின் தலையைக் கொய்தது அருளின் பொருட்டேயாகும். அதேபோல் தன்னையன்புடன் வழிபட்ட மண்ணுண்ட கண்ணனாகிய திருமாலின் பங்கயக் கண்களைக் கொண்டது அவனுடைய பக்தியின் ஆழத்தைச் சோதிக்கவேயாம். அந்த சோதனையைத் தான் வேடர் தலைவனான கண்ணப்பருக்கும் தந்து ஆட்கொண்டான். இவை நமக்குக் கொடுமையான செயல்களாகத் தோன்றினும் ஆழ்ந்து நோக்கினால் அவை அருளால் செய்யப்பட்டனவே என்பது புலனாகும். அது எவ்வாறு? பொன்னின் குற்றம் நீங்க அதனை நெருப்பிலிட்டுத் தூய்மை செய்கின்றோம். அதுபோலவே தான் இறைவனும் நம்மை சோதனையாகிய நெருப்பில் புடம் போட்டுப் பத்தரை மாற்றுத் தங்கமாக மாற்றுகின்றான். எனவே அவனுடைய சோதனைகளை அடியார் வெறுப்பதில்லை. அதனைத் தான் நாமும் பின்பற்ற வேண்டும். சோதனைகள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக் கவ்வளவு ஆண்டவன் நம்மிடம் நெருங்கி வருகின்றான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவான உண்மையாகும்.

அன்புக் கொண்டலான இறைவன் மனிதர்களுக்குப் பழிக்கஞ்சும் பண்பு வேண்டும் என்பதை யுணர்த்திக் காட்டினான் அதுவும் சொல்லால் அல்ல! செயலால். தாம் ஆண்டு கோயில் கொண்ட நகரத்துக்கும், நகர மக்களுக்கும் பழி வருதல் கூடாது என்பதில் கருத்துடையராய் இருந்தார். கல்

யானைக்குக் கரும் பருத்தித் தன்னிருப்பை யுணர்த்திய சுந்தரேசப் பெருமான் தன்பால் அன்பு கொண்டு வழிபட்டு வந்த வாளாசிரியன் மனைவியின் மானத்தைக் காக்க அவன் உருவெடுத்து மாணுக்கனை வென்றார். எனினும் வென்ற முறை கொடுமையானது. உறுப்புறுப்பாக வெட்டிப் பிறன் மனை விரும்புவான் பெறும் தண்டனையை உலகுக்கு உணர்த்தி மக்களுக்கு அறநெறியைப் போதித்தார்.

உயிர்களுக்கு இறைவனாக விளங்கும் அபிடேகச் சொக்கேசர் தன்முன் அனைத்துயிரும் சமமே என்னும் தத்துவத்தை யுணர்த்தும் பொருட்டும் பல திருவிளையாடல்களைச் செய்தார், பாண்டியனுக்கு அருள் புரிந்த அதே மனம் மழையிலும் குளிரிலும், வருந்தி நின்ற போதும் மாருத அன்பால் பண் பாடிய பாணனுக்கு அவன் வருந்தாது வருந்தாது நிற்கப் பொன்னாலான பலகை யொன்றைத் தந்தது அதோடு தன்னுடைய தோடணிந்த செவியை அவனுடைய தீம்பாடலுக்குத் தரவும் செய்தது. அவனுடைய துன்பம் தீர விறகு வெட்டியாக வந்து வாதிட வந்த ஏமநாதனை விரட்டி அருள் பாலித்தான். மார்க்கண்டேயனைக் காக்கும் பொருட்டு,

கோணரு உளைப்பூங் கொத்தலர் குடுமிக்
குறுங்கண் நெட்டிலைச் சிலைக்குனித்த
கூற்றுயிர் குடித்தான்.

திரிபுரங்களைக் கொண்டு இன்னல் விளைத்த அசுரர்களை நகைத்து அழித்தான். தேவர்கள் பாற்கடலைக் கடையும் போது நஞ்சினை யுண்டு அவர்களைக் காத்து அருள் செய்தான். மேரு மலையினைப் போன்று விளங்கும் அழகிய தோள்கள் தாருகாவன முனிவர்களின் செருக்கடங்க,

பொருசமர் இடையெதிர் பிளிறுமோர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற்றி நின்றன
புகையெழ அழலுமிழ் சுழல்விழி யுழுவை
வழங்கும் ஓர்ஆடை மருங்குற் கணிந்தன.

இதனால் செருக்கடங்கிய முனிவர் இறைவனைப் பணிந்து நல்லறிவு பெற்றனர். முனிவர்களின் செருக்கை மட்டுமா அடக்கினார்? "புலவு எயிறு அயில்தரு குருதியோடுலவு மடங்கலின்

வீரம்'' ஒடுங்கித் தன்னிலை பெறவும் செய்தது. இவையெல்லாம் ஏன் செய்ய வேண்டும்? அருள்தான் காரணம்

எவ்வுயிர்க்கும் இறைவனுன எந்தை ஆறறிவுடைய மக்களுக்கும், அவர்களுக்கும் மேலான தேவர்களுக்கு மட்டுமா அருள் செய்தான். ஐயறிவுடைய, மிக எளிய உயிர்களுக்கும் அருளவே செய்தான். அவனைச் சேர்ந்த வண்டு ஒன்று அடைந்த இன்பத்தினை,

சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும் – வீழ்ந்தெழுந்த
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

என்னும் ஒரு பாடல் குறிக்கின்றது. அந்த வண்டு அடைந்த இன்பத்தினை அவனை நாடி நிற்கும் அடியார்கள் பெறுவர். தேன் மலரினைக் கண்ட பின்பு வண்டு அவ்விடம் விட்டுப் பெயராது, அதைப் போல் அடியார்களும் இறைவனை நாடித் தேடிக் கண்டபின் அவனை விட்டு அகலாராய் இருக்கின்றனர். அவர்கள் இறைவனைப் பனந்தருவாக உருவகப் படுத்தித் தாங்கள் அடைந்த அனுபூதியினையும், இறைவனின் தன்மையினையும் உருவகப் படுத்தி,

அழகுற்றதோர் மதுரேசனை யமரேச எனக் கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமுறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கினை சாற்றத்தகு மப்பா
பழுதற்றதோர் சான்ருண்மை பயின்ருர்தின முயன்ருற்
பலமுண்டதி னலமுண்டவ ரறிவார்பல கலைநூ
லெழுதப்படு மேடுண்டது வீடுந்தர வற்ரு
லெழுதா ததோர் திருமந்திர மிளம்பாளையு ளுண்டே.

என்று கூறுகின்ருர். தன்னையடைந்தோர்க்குப் பக்குவப்பட்ட மனநிலையினைத் தந்து அருள் புரிந்து சரியை, கிரியை, ஞானங்களைப் போதித்துக் கூறப்படாததான யோகத்தினை ஞானகுருவாய்த் தானே முன்னின்று பயிற்று வித்து வீடுபேறு தரும் ஒப்பற்ற தலைவன் அவன். அத்தகைய பெருந்தகையின் பண்பினை அறியாது பலபேசும் பேதைகளுக்கு என்ன கூறு

வேன் என்று அவர்கள் அறியாமை குறித்து இரங்குகின்றார் ஓர் அடியார். அவரது இரக்கம்,

வரதனுகி எவ்வுயிர்க்கும் மாயாவிருத்தி வலியடக்கி
சரதமான வீட்டின்பந் தருவாய்த் தனிமுதலே
சரதமான வீட்டின்பந் தருவாய்வீடு பெறுவார்போல் நீயே
விரதயோக நிலையடைந்தாய் என்பார்க்கென்நான் விளம்புவனே.

என்னும் பாடலாக வெளிப்படுகின்றது. எனவே ஈசன் தந்தையாக மட்டுமன்றி செயல் மூலம் உணர்த்தி வழிகாட்டும் நல்ல ஞானசிரியனுகவும் இருக்கின்றான் என்பது புலப்படுகின்றது. அறிவுக்கும் அருளுக்கும் மட்டுமா ஆசிரியன் அபிநயக் கூத்துக்கும் அன்றோ அவன் ஆசிரியன். உயிர்கள் இன்புற ஆனந்த நடனம் புரியும் அருளாளன் அல்லவா? அந்த அருளால் தானே பொன்னம்பலத்தையும் விடுத்து மதுரை வெண் பொன் சபையில் அடியார் கண்டு மகிழ, உலகு உய்ய நடனம் ஆடினான். அந்த நடனம் ஒப்பற்ற உயர்தனி நடனம். ஆடியவன் உயிர்களைப் படைத்து ஆட்டுவிப்பவன். பெண்மையே கண்டு வியந்து நிற்குமாறு ஆண்மை அங்கே தனியாக நடனமிட்டது என்பதனை,

பூண்ட பறையறையப் பூதம் மருள
நீண்ட சடையான் ஆடுமே
நீண்ட சடையான் ஆடுமென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே.

என்னும் பாடல் அழகாகக் காட்டுகின்றது. மாட்சிமை பொருந்திய அழகிய சாயலுடைய உமாதேவி கண்டு வியக்க பூதம் மருண்டு நிற்க நீண்ட செஞ்சடை படர்ந்து விரிந்து பறக்க அடியார் ஆனந்தக் கண்ணீர் பெருக்க பறையும் உடுக்கையும் சப்திக்க நடமிடும் இறைவனுக்கு அடியார்களின் இதயத் தாமரையில் தானு நடனமாட முடியாது?

உலகவின் பங்களில் சிக்குண்டு வாடிப் போய் நிற்கும் இதயக்கமலத்தை அருளான நீர் பாய்ச்சித் திருவிளையாடல்களை நிகழ்த்தி, சோதனை என்னும் கதிர்க்கரங்களால் இதழைத் திறந்து கள்ளமற்ற அன்பு என்னும் நறுமணத்தையும் ஒப்பற்ற பக்தியென்னும் மதுவினையும் கொண்ட சேயிதழ்ச் செம்பொற் கொட்டைத் தாமரையாக மலர்த்தி அதனுள் நீங்காது உறை

பவன் இறைவன் எனவே தான் அவன் தன்மையினை யுணர்ந்து அவன் தரும் சோதனைகளையும் நிகழ்த்தும் திருவிளையாடல்களையும் அடியார்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்வதோடு அவனைப் போற்றி வழிபடவும் செய்கின்றனர். அது மட்டுமா,

எந்தாய் அனைத்துலகும் ஈன்றாய் எத்தேவர்க்கும்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவால வாயுறையும்
சிந்தா மணியே சிறியேனுக் கிரங்காயோ.

என்று வேண்டி இறைஞ்சுகின்றனர். எனவே தன்னை யுணர்ந்து மனம் பக்குவப்பட்டு நிற்கும் அந்த அடியார்களின் இதயகமலத்திற்கு ஆண்டவனின் அருளொளி இன்றியமையாததாக உள்ளது. பயிர்களை முகிலானது மழை பொழிந்து காப்பது போல் அடியார்களுக்கு அருட் கொண்டலாகிய இறைவன் அன்பு மழையினைப் பொழிந்து கருணை வெள்ளத்தின் மூலம் வாழ வைக்கின்றான். எனவே நாமும் அவன் பொன்னடிகள் போற்றி நலமுறுவோம்.

---


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 5–00 வெளிநாடு ரூ. 7-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.



அருள்மொழியரசு திரு முருக கிருபானந்தவாரியார் அவர்கட்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தமை.

சிவ சிவ



மக்கள் பொருந்தலைவர் திரு. கு. காமராசர் அவர்கட்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கதர்ப்பட்டாடை போர்த்திச் சிறப்பித்தமை.



மக்கள் பேரவைத் தலைவர் திரு. ஜி. பூவராகவன் அவர்கட்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கதர்ப்பட்டாடை போர்த்திச் சிறப்பித்தமை.

சிவ சிவ



மக்கள் பொருந்தலைவர் திரு. கு. காமராசர் அவர்கட்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கதர்ப்பட்டாடை போர்த்திச் சிறப்பித்தமை.

உ
சிவ சிவ



மக்கள் பேரவைத் தலைவர் திரு. ஜி. பூவராகவன் அவர்கட்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கதர்ப்பட்டாடை போர்த்திச் சிறப்பித்தமை.

சிவ சிவ]

# தமிழ்நாடு மக்கள் பேரவையில்

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவும் நிகழ்ச்சிச் சுருக்கமும்

திரு. ந. ரா. முருகவேள் M, A , அவர்கள்,
சென்னை.

சென்னைத் திருமயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 23-1-74 அன்று தமிழ்நாடு மக்கள் பேரவையின் சார்பில், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கும், திருக்குறளார் திரு: வீ. முனுசாமி பி. ஏ.. பி. எல். அவர்களுக்கும், மக்கள் பெருந்தலைவர் திரு. கு காமராசர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கித் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம் வருமாறு:-

"இன்று ஒரு சிறந்த நன்னாள், இன்றையதினம் இரண்டு தலையாய மனிதர்களைப் போற்றிப் பாராட்ட, நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கிறோம். தலையாய மனிதர் யார்? என்பதனை, நம்முடைய அப்பரடிகள் அருளிச் செய்கிறார்:-

"அனுசயப்பட்டு, அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யாய மனிதரே"

என்பது அப்பரடிகள் அருளிய அழகிய இனிய தேவாரப் பாடல். அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமானைப் போலத் தமிழ்நாடு முழுவதும் சுற்றி, மூலை முடுக்குகளில் ஊர்களுக்கெல்லாம் சென்று, ஓய்வு என்பதே அறியாமல், ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழையும், சைவத்தையும் வளர்த்து வருவதுடன், பொதுவாகப் பக்தி நெறியையும், ஒழுக்க நெறியையும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நாள்தோறும் தம்முடைய இன்னிசைச் சொற் பொழிவுகளால், மிகவும் சிறந்த முறையில் பரப்பி

வருகின்றார்கள். எத்தனையோ பல திருக்கோயில் திருப்பணிகள் அவர்களின் பெரு முயற்சியால் சிறப்புற நிறைவு பெற்றிருக்கின்றன. 'பேசாத நாளெல்லாம் பிறவாத நாள்' என்று, திருநாவுக்கரசர் பெருமான் குறிப்பிட்டார். அருள்மொழியரசு அவர்கள் ஒரு சிறந்த நாவரசர். அவர் இறைவனின் திருப்புகழைப் பேசாத நாள் எதுவும் இல்லை. ஒவ்வொரு நாளும் அவர் இறைவனின் திருப்புகழைப் பேசிப் பேசித் தாமும் மகிழ்வதுடன், பல்லாயிரக்கணக்கான மக்களையும் மகிழ்வித்து நல்வழிப்படுத்தி வருகின்றார். அவரால் இன்று சமய உணர்வுப் பக்தி நெறியும் அழிந்து படாமல், தழைத்து வளர்ந்து வருகின்றன. பண்டைக் காலத்தில் நால்வர் பெருமக்கள் செய்து வந்த சமயப் பணிகளை, இக்காலத்தில் அவர் ஒருவராகவே பெரிதும் முயன்று செய்து வருகின்றார். அவர் தம் கல்விச் சிறப்பும், ஒழுக்க நலனும், சொல்லாற்றலும், தொண்டுள்ளமும் பெரிதும் வியந்து போற்றத் தக்கனவாகும்.

இவ்வாறே திருக்குறளார் திரு, வி. முனுசாமி அவர்களும் தமிழகத்தில் தலைசிறந்த நீதி நூலாகிய திருக்குறளை எளிமையாகவும், இனிமையாகவும், எல்லோருக்கும் விளங்கும்படியும், பல்லாண்டுகளாகப் பரப்பி அருந் தொண்டாற்றி வருகின்றார் தாம் சிரிக்காமல், எல்லோரையும் சிரிக்கவைத்து, அரிய நல்ல கருத்துக்களைப், பொது மக்களின் உள்ளத்தில் நன்றாகப் பதியும்படி செய்து, சிறந்த நல்ல அறிவுப் பணி செய்து வருகின்றார்.

திருக்குறள் வெறும் இலக்கிய நூல் மட்டுமல்லாமல், சிறந்த சமய நூலாகவும் விளங்குகின்றது. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் சேர்ந்தால்தான் உலகம் நலம் பெறும். அதுபோல இலக்கியமும் சமயமும் இணைந்து பயிலப்பட்டால் தான் மக்கள் நலம் பெறுவர். விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் சமயமும் இலக்கியமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடி அத்துவைதநிலையில் பின்னிப் பிணைந்திருப்பவை. வாரியார் சமயப் பணியிலும் திருக்குறளார் சமுதாயப் பணியிலும் ஈடுபட்டு அருந் தொண்டாற்றி வருகின்றார்கள். இருவருமே சிறந்த நல்ல பேரறிஞர்கள். இவ்விரு பெருமக்களின்

தொண்டும் தமிழக மக்களின் நலத்திற்காகப் பெரிதும் ஆக்கம் அளித்து வருவதாகும்.

இவர்களைப் போற்றிப் பாராட்டுவதன் மூலம், நாம் நம்மை நாமே போற்றிப் பாராட்டிக் கொள்கின்றோம். இவர்கள் இன்னும் பன்னெடுங் காலம் நீடினிது சிறப்புற வாழ்ந்து, சமய சமுதாயத் தொண்டுகள் ஆற்றி வருதல் வேண்டும் என்று விரும்பி, எல்லாம் வல்ல செந்திலாண்டவன் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்'' - என்று சொற்பொழிவாற்றியருளினார்கள்.

சென்னையிலுள்ள தருமபுர ஆதீன பிராச்சார நிலையத் தலைவர் ஸ்ரீமத், வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருப்பனந்தாளில் இருப்பதால் தருமபுர ஆதீனத்தின் முதல் அடியவர் என்ற நிலையில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் தருமையாதீனச் சார்பில் தருமையாதீன குரு மகா சன்னிதானம் அவர்கள் அனுப்பியருளிய பொன்னாடைகளை அவ்விரு பெருமக்களுக்கும் போர்த்திச் சிறப்பித்தார்கள். தருமையாதீனச் சார்பில் ஆசியுரையும் வாசிக்கப் பெற்றது.

பின்னர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் என்ற முறையில் ஷை இருவர்களுக்கும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

தொழிலதிபர் திரு. மகாலிங்கம் அவர்கள் சார்பிலும் பேரூர் சாந்தலிங்க அடிகளார் அவர்கள் சார்பிலும் வாழ்த்துக்கள் வாசித்து அளிக்கப் பெற்றன. மக்கள் பேரவையின் சார்பில் கேடயங்களும் அளிக்கப் பெற்றன.

பன்மொழிப் புலவர் திரு; க. அப்பாத்துரை அவர்கள் இருவரையும் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

பின்னர் பேசிய திரு. காமராசர் அவர்கள் இவ்விரு பெரும் புலவர்கட்கும் பாராட்டு விழாத் தேவையில்லை. என்றும், லட்சோப லட்சம் மக்கள் நாடோறும் அவ்விருவரையும் பாராட்டுகிறார்கள் என்றும், திசை திரும்பி, மக்கள் செல்கிற காலத்தில் மக்கள் நல்ல திசையில் செல்லும் பணியில் அவ்விருவரும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் கூறி,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# கந்தரநுபூதி வழிபாட்டு 108 போற்றி

திரு: சி. குமாரஸ்வாமி அவர்கள்:
சென்னை

——

| | | |
|---|---|---|
| 1 | தனியானை சகோதர | போற்றி! |
| 2 | உல்லாசனே | ,, |
| 3 | நிராகுலனே | ,, |
| 4 | யோகனே | ,, |
| 5 | இதனே | ,, |
| 6 | சல்லாப | ,, |
| 7 | விநோத | ,, |
| 8 | முருகா | ,, |
| 9 | சுரபூபதியே | ,, |
| 10 | சண்முகா | ,, |
| 11 | தயாபரனே | ,, |
| 12 | குமரனே | ,, |
| 13 | கிரிராஜ குமாரி மகனே | ,, |
| 14 | நிட்டூர | ,, |
| 15 | நிராகுல | ,, |
| 16 | நிர்ப்பயனே | ,, |
| 17 | தார்மார்ப | ,, |
| 18 | நாகாசல வேலவ | ,, |
| 19 | நாலுகவித்தியாகா | ,, |
| 20 | சுரலோக சிகாமணியே | ,, |
| 21 | பெம்மானே | ,, |
| 22 | பிறவாதவ | ,, |

(முன் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடம் ஒழுக்கம் குன்னியிருக்கிறது; நல்லொழுக்கம் உடையவராய் மக்கள் வாழவேண்டும் என்று அறிவுறுத்தினர். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும், திருக்குறள் முனுசாமி அவர்களும் பாராட்டுக்கு மறுமொழி பகர்ந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் திரு கு. காமராசர் அவர்கட்கும், திரு, ஜி. பூவராகவன் அவர்கட்கும் கதர்ப் பட்டாடை போர்த்திச் சிறப்பித்தருளினர்கள்

நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

| | | |
|---|---|---|
| 23 | இறவாதவ | போற்றி |
| 24 | தனிவேல் முனியே | ,, |
| 25 | குகனே | ,, |
| 26 | குருபுங்கவ | ,, |
| 27 | எண்குண பஞ்சரனே | ,, |
| 28 | வீரா | ,, |
| 29 | சூரனே | ,, |
| 30 | விதிமாலறியா விமலன் புதல்வ | ,, |
| 31 | அதிகா | ,, |
| 32 | அபயா | ,, |
| 33 | அமராவதி காவல | ,, |
| 34 | சூர பயங்கரனே | ,, |
| 35 | அயில் வேலரசே | ,, |
| 36 | உபதேச முணர்தியவா | ,, |
| 37 | விரிதாரண | ,, |
| 38 | விக்ரமனே | ,, |
| 39 | விரதா | ,, |
| 40 | மயில் வாகனனே | ,, |
| 41 | விரதா | ,, |
| 42 | காளையே | ,, |
| 43 | குமரேச | ,, |
| 44 | சுரபூபதியே | ,, |
| 45 | வடிவிக்ரம வேல் மகிபா | ,, |
| 46 | குணபூதரனே | ,, |
| 47 | போர் வேல | ,, |
| 48 | செய்யோய் | ,, |
| 49 | வேதாகம ஞான விநோத | ,, |
| 50 | மன அதீதா | ,, |
| 51 | பொன்னே | ,, |
| 52 | மணியே | ,, |
| 53 | பொருளே | ,, |
| 54 | அருளே | ,, |
| 55 | மன்ன | ,, |
| 56 | வானவனே | ,, |
| 57 | ஆறு அமுதே | ,, |
| 58 | ஞானகரனே | ,, |
| 59 | தற்பரனே | ,, |
| 60 | மலைகூறிடு வாகையனே | ,, |
| 61 | கருணாகரனே | ,, |

| | | |
|---|---|---|
| 62 | கங்கா நதிபால | போற்றி |
| 63 | க்ருபாகர | ,, |
| 64 | நாதா | ,, |
| 65 | இமையோர் உலகம் குளிர்வித்தவ | ,, |
| 66 | விண்ணவர் சூடுமலர்ப் பாதா | ,, |
| 67 | குறமின் பதசேகரனே | ,, |
| 68 | வேதாளகணம் புகழ் வேலவ | ,, |
| 69 | கோவே | ,, |
| 70 | தேவே | ,, |
| 71 | சிவசங்கர தேசிகனே | ,, |
| 72 | சுனையோடு திரிந்தவனே | ,, |
| 73 | அருவித் துறையோடு திரிந்தவனே | ,, |
| 74 | இதணோடு திரிந்தவனே | ,, |
| 75 | பசுந்தினையோடு திரிந்தவனே | ,, |
| 76 | வாகா | ,, |
| 77 | யோகா | ,, |
| 78 | சிவஞான உபதேசிகனே | ,, |
| 79 | நேசா | ,, |
| 80 | சாடும் தனிவேல் முருகா | ,, |
| 81 | குரவா | ,, |
| 82 | குலிசாயுத | ,, |
| 83 | குஞ்சரவ | ,, |
| 84 | சிவயோக | ,, |
| 85 | தயாபர | ,, |
| 86 | எம்தாயும் நீயே | ,, |
| 87 | எனக்கருள் தந்தையும் நீயே | ,, |
| 88 | எனையாள் கந்தா | ,, |
| 89 | கதிர் வேலவ | ,, |
| 90 | உமையாள் மைந்த | ,, |
| 91 | மறை நாயகனே | ,, |
| 92 | கிருபை சூழ்சுடரே | ,, |
| 93 | விகிர்தா | ,, |
| 94 | ஞான சுகாதிப | ,, |
| 95 | உருவாய் வருவாய் அருள்வாய் | ,, |
| 96 | அருவாய் ,, ,, | ,, |
| 97 | உளதாய் ,, ,, | ,, |
| 98 | இலதாய் ,, ,, | ,, |
| 99 | மருவாய் ,, ,, | ,, |

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ

# கல்வெட்டுக்களும் செப்புத் திருமேனிகளும்

திரு: கே. ஸ்ரீதரன் எம், ஏ. அவர்கள்,
ஸ்ரீரங்கம்

பழமையும் பெருமையும் பெற்று விளங்கும் பல திருக்கோயில்களை கொண்டது தமிழ்நாடு. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. நமக்கு நல் வாழ்வு காட்டும் இறைவன் அங்கு எழுந்தருளியிருக்கின்ருன். இறையருளை உயிர்கள் பெறுவதற்கு வழியாக அமைந்தவை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றுமாம். இவைகளால் நாம் நல்வழியும், உயர் ஞானமும் பெறலாம் என்று தாயுமானவர் கூறுகிருர்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

ஆகவே நம் முன்னேர்கள் நாட்டின் பல இடங்களில் இறைவனுக்காக ஆலயங்களை எழுப்பினுர்கள்.

இறைவன் திருமேனியை இருவகையாகப் பிரிக்கலாம்-1 மூலவர் (2) உற்சவர். கருவறையில் நிறுவப்பட்டிருக்கும்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

| | | | | |
|---|---|---|---|---|
| 100 | மலராய் | ,, | ,, | போற்றி |
| 101 | மணியாய் | ,, | ,, | ,, |
| 102 | ஒளியாய் | ,, | ,, | ,, |
| 103 | கருவாய் | ,, | ,, | ,, |
| 104 | உயிராய் | ,, | ,, | ,, |
| 105 | கதியாய் | ,, | ,, | ,, |
| 106 | விதியாய் | ,, | ,, | ,, |
| 107 | குருவாய் | ,, | ,, | ,, |
| 108 | குகனே | ,, | ,, | போற்றி! போற்றி! |

முருகா சரணம்

[செந்தமிழ்க் கடவுள் செவ்வேளுக்குத் தமிழில் அர்ச்சனை செய்ய உதவும் என்ற அவாமேலீட்டால், ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய "கந்தர்அநுபூதி" யிலிருந்து எளியேனுல் தொகுக்கப்பட்டது. பெரியோர்கள் பிழை பொறுத்தருள்க.]

இறைவனுக்கும் மூலவர் என்று பெயர். திருவிழாக்களின் போது வீதி உலா வருவதற்காக வெளியில் கொண்டு வரப் படும் இறைவனுக்கு உற்சவர் என்று பெயர். இது உலோ கத்தினுல் செய்யபட்ட திருமேனியாக இருக்கும். நம் தமிழ கத்தின் கோயில்களில் வழிபாட்டுக்காக இருக்கும் செப்புத் திருமேனிகள் கலையழகு மிகுந்து காணப்படுகின்றன. தமிழ கத்தை ஆண்ட மன்னர்கள் பலர் செப்புத் திருமேனிகளை செய்து கோயில்களுக்கு அளித்து அவைகளுக்கு தினந்தோறும் பூசனை நடக்கவும், மற்றும் திருமேனிகள் எவ்வாறு செய்யப் பட்டன என்பது பற்றிய செய்திகளை பலகோயில் கல் வெட்டுக்கள் நமக்கு கூறுகின்றன. அவற்றைப் பற்றி இக் கட்டுரையில் நோக்குவோம்.

செப்புத் திருமேனிகள்:- உலோகத் திருமேனிகள் படிமங்கள் என்றும் பிரதிமங்கள் என்றும் வழங்கப்படுகின் றன இவற்றை வார்க்கும் முறைகளைப்பற்றி சிற்பசாஸ்திரம் மான சாரம், விஷ்ணுசம்கிதை, அபில சித்தார்த்த சிந்தாமணி போன்ற நூல்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. திருமேனி கள் வார்க்கும் முறையை இருவகைகளாகப் பிரிக்கலாம் 1 கூம்பு முறை (Solid) 2. கூடு முறை Hollow)

கூம்பு முறை:- எந்த உருவைச் செய்ய வேண்டுமோ அவ்வுரு போல் முதலில் தேன் மெழுகினுல் செய்து, அதன் மேல் 'புற்று மண்' பூசி உலர வைப்பர் இதன் பின்புறத்தே தலையிலும், இடையிலும், அடியிலும் துளைகள் இருக்கும் இது நன்ருக உலர்ந்த பின்னர் தீயில் இடுவர் உள்ளே இருந்த மெழுகு உருகிப்போய் அச்சாக இருக்கும். பிறகு செம்பு, தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றைக் கலந்து உருக்கி பின்னுல் உள்ள துளையின் வழியாக ஊற்றுவர். பிறகு அதை குளிர வைப்பர். உலோகம் குளிர்ந்து கெட்டியாகியதும் அச்சை உடைத்து வார்ப்பை வெளியேஎடுப்பார்கள் பிறகு சிற்றுளி கொண்டு அதை செதுக்கி எழிலுற அமைப்பார்கள்.

கூம்பு முறையில் செய்வது பற்றி தஞ்சை கோயில் கல் வெட்டு கூறுகின்றது:

''கீழ்கிடந்த முயலகனேடும் கூட பாதாதிகேசாந்தம்
முக்காலே அரைக்கால் முழ உசரமும் ஸ்ரீஹஸ்தம் நாலும்
சடைமேல் கங்கா பட்டாரகியும் சடை ஒன்பதும்
பூமாலை ஏழும் உடைய கனமாக எழுந்தருளிவித்த
ஆடவல்லார் திருமேனி ஒன்று''

இங்கு 'கனமாக' என்றால் முழுவதும் உலோகத்தினாலேயே (Solid) செய்யப்பட்டது என அறியலாம்.

கல்வெட்டுக்களில்:- இத்தகைய சிறப்பு வாய்ந்த பல உலோகத் திருமேனிகளை செய்வித்தும், பூசனைகள் நாள் தோறும் நடத்தவும் கோயில்களுக்கு பல மன்னர்கள் தானமளித்துள்ளார்கள், கல் வெட்டுக்களில் கடவுளர் உருவங்களுக்கு 'திருமேனி' என்றும், மனித உருவங்களுக்கு 'பிரதிமம்' என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

முதலாம் இராசராசன் தஞ்சை கோயிலுக்கு ''பாதாதி கேசாந்தம் இருபதிற்று விரலே நாலு 'தோரை' உசரத்து நாலுகை உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த சண்டேசவரப்பிரசாத தேவர்'' திருமேனி ஒன்று அளித்தான். 'தோரை' என்றால் நெல் என்பது பொருள். 8 தோரை = 1 விரல்; 12 விரல் = 1 சாண்; 2 சாண் = 1 முழம் என்ற அளவுகளை உடையது. (1) மேலும் உமாபரமேச்வரியார், மகாதேவர், பஞ்சதேகமூர்த்தி. சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, திருமால் ஆகிய உருவங்களும் அவைகளை வைக்க பீடங்களும் செய்து அளிக்கப்பட்டது. உத்தம சோழி என்பவன் அர்த்தநாரி தேவருடைய திருமேனியை கோயில் நிறுவவும், அதற்கு பூசனை செலவுகளுக்காவும் நிலங்கள் வரியில்லாமல் கொடுக்கப் பட்டதாக திருவெண்காடு கல்வெட்டு கூறுகின்றது. எடுத்த பாத மூத்த செட்டி என்பவன் திருவேள்விக்குடி கோயிலில் கூத்தபிரான் திருமேனியை எழுந்தருள்வித்து அத்திருமேனி முன் விளக்குஒன்று வைப்பதற்காக நன்கொடை அளித்தான், இராசராசன் தமக்கையான குந்தவையார் 'காட்டுமன்னார்குடி ஆனந்தீசுவர சுவாமி கோயிலில் 'சூரிய தேவர்' திருமேனி அமைக்கவும், அதன் முன் விளக்கு வைப்பதற்கும் பொன் தானமளித்தாள் என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

(1) சோழர்கால அரசியல் தலைவர்கள்–கா. ம, வேங்கடராமையா

ஸ்ரீபலி சடங்கு: கோயில் நடக்கும் முக்கியமான சடங்குகளில் ஸ்ரீபலி சடங்கு என்பது முக்கியமான ஒன்றாகும். இச்சடங்கின் போது சிவபெருமானின் ஒரு குறிப்பிட்ட வடிவமுடைய உலோகத் திருமேனி கோயிலைச் சுற்றியோ, கோயிலுக்குள்ளாகவோ நன்றாக அலங்கரிக்கப்பட்ட நிலையில் கொண்டு வரப்படும். வடஆற்காடு மாவட்டம் கள்ளத்தூர் கும்பேசுவரர் கோயிலில் ஞாயிற்று கிழமைகள் தோறும் ஸ்ரீபலி சடங்கு நடத்தி பாசுபதமூர்த்தியை ஊரைச் சுற்றி வலமாகத் திருவுலாக் காட்சியில் கொண்டு வரத் தனிப்பட்ட முறையில் 37 காசுகள் நன்கொடை அளிக்கப்பட்டது' (157 of 1916).

வெள்ளித் திருமேனிகள்: தேவன் குப்பன் என்பவன் கும்பகோணம் நாகேசுவரர் கோயிலில் இறைவனுக்கு "வெள்ளித் திருமேனி" ஒன்று அமைக்கச் செய்து, அதற்கு நாள்தோறும் மும்முறை நிவேதனம் செய்ய ஏற்பாடு செய்ததாக முதலாம் இராசராசனின் 5-ஆம் ஆண்டு கல்வெட்டு கூறுகின்றது. பரகேசரி மூவேந்த வேளான் என்பவன் ஊர் சபையாரிடம் நிலத்தை விலைக்கு வாங்கி தான் இவ்வூர் கோயிலில் நிறுவிய "வெள்ளி திருமேனியுடைய" "அரைகுணவரச் சித்தர்" என்ற இறைவனுக்கு நண்பகல் பூசனை நிவேதனங்கள் நடத்த நிலத்தை அளித்ததாக முதலாம் பராந்தகனின் 33-ஆம் ஆண்டு திருப்பூந்துருத்திக் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

திருவாவடுதுறை கோயில் கல்வெட்டு அக்கோயிலுக்கு அளிக்கப் பெற்ற உலோகத் திருமேனிகளின் பட்டியலை நமக்குக் கூறுகின்றது. உலோகத் திருமேனிகள் வலம் வரும் பொழுது விதானங்கள் தூக்குவார்க்கு ஊதியம் தரவும்; திரிபுராந்தகர், இடபதேவர், கணபதி ஆகிய திருமேனிகளுக்குப் பால், தயிர், சர்க்கரை, தேன் ஆகியவற்றால் திருமஞ்சனம் செய்ய செலவு ஆகியவைகளுக்கு தானமளித்ததாக உத்தம சோழனின் 8-ஆம் ஆண்டு கோனேரிராசபுரம் கல்வெட்டு கூறுகின்றது.

பிரதிமங்கள்: உலோகத்தால் செய்யப்பட்ட மக்கள் வடிவங்களுக்கு 'பிரதிமம்' என்று பெயர். முதலாம் இராசராசனின் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீகாரியம் (கோயிற் காரியங்கள்) செய்பவனை பொய்கை நாடு கிழவன் என்பவன் தஞ்சை கோயிலில் நம்பிஆரூரர், நங்கைபரவையார், திருநாவுக்கரசர். திருஞானசம்பந்தர் ஆகியோரது பிரதிமங்களை செய்வித்து அளித்தான். மேலும் அவன் தஞ்சைக் கோயிலுக்கு 'பாதாதி

கேசாந்தம் ஒருமுழமே நால்விரலரை உசரத்து இரண்டு திருக்கை உடையராக' இராசராச சோழன் பிரதிமம் ஒன்று செய்து அளித்தான். கல்வெட்டில் இராசராசன் 'பெரிய பெருமாள்' எனக்குறிக்கப் பெறுகிறுள். இதைத் தவிர இராசராசனின் பட்டத்தரசியான உலோகமா தேவியாரின் படிமமும் எழுந்தருளுவிக்கப் பெற்றது.

**திருப்பதிகங்களும் திருமேனிகளும்:** பொய்கைநாடு கிழவன் தஞ்சை கோயிலில் சிறுதொண்டர், மெய்ப்பொருள் நாயஞர் ஆகியோருக்கு படிமங்கள் செய்து அளித்தான். கல்வெட்டில் மெய்ப்பொருள் நாயஞர் "தத்தா நமரே காண்" என்ற மிலாடுடையார் படிமம் என்று குறிப்பிடப்படுகிறது. நம்பியாண்டார் நம்பி அருளிய ' திருத்தொண்டர் திருவந்தாதியில்' வந்த சொற்ருெடர் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. மேலும் அவன் பெரிய பெருமாளுக்குத் 'தேவார தேவராக' எழுந்தருளுவித்த திருமேனி ஒன்று அளித்தான். இத்திருமேனி சந்திரசேகரர் என அழைக்கப் பெறுவர். திருப்பதிகங்களை ஓதுங்கால் இத்திருமேனியை எதிரில் எழுந்தருளுவித்து ஓதுவது பழக்கமாக இருந்திருக்கலாம்.

தஞ்சை மாவட்டத்தில், காவேரிபட்டணத்திற்கு அருகே மேலப்பெரும் பள்ளம் (திருவலம்புரம்) கோயிலில் வீணுதர தட்சிணுமூர்த்தி செப்புத்திருமேனி உள்ளது. அப்பர் தம் திருப்பதிகத்தில் அத்திருமேனியை,

"தெறித்ததொரு வீணையராய செல்வர்தம் வாய்
சிறுமுறுவல் வந்து எனது சிந்தை வெளவ
வட்டணைகள் பலநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்காங்கே மன்னினுரே"

என்று போற்றுகின்ருர். இத்திருமேனியை இக்கோயில் இரண்டாம் இராசராசன் காலத்து கல்வெட்டில் "வட்டணை காட்ட வந்த நாயகர்" என்று திருப்பதிகச் சொற்ருெடரால் குறிப்பிடப்படுகிறது.

**திருமேனிகள் களவு:** இத்தகைய சிறப்பு வாய்ந்த பல செப்புத் திருமேனிகள் நம்முடைய கோயில்களில் எழுந்தருள்விக்கப் பெற்றன. இத்திருமேனிகளின் கலையழகை மேல்நாட்டவரும் போற்றுகின்றனர். ஆனல் இக்கலைச் செல்வத்தை அயல் நாட்டவர்க்கு விற்றுப் பணம் பெறுகின்றனர். தற்பொழுது பல கோயில்களில் செப்புத் திருமேனிகள்களவாடப் படுகின்றன. இவ்விக்கிரக திருட்டை தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுத்து வருகிறது. இதற்கு நாமும் உதவிசெய்து நம் கலைச் செல்வங்களைப் போற்றி பாதுகாப்போம்,

[சிவ சிவ

# விநாயகர் துதி

திரு. ந. ரெங்கராஜன் அவர்கள்
சென்னை—19

——

சாமரக் கர்ண சதுர்புஜ தேவாநின்
தாமரைப் பாதம் தனைப்பணிந்தேன்-பாமரன்யான்
பாத்தொடுத்துப் பாடிப் பரமனை பூசிக்க
நாவன்மை தந்தருள் நல்கு.

(1) அப்பரை அன்புடன் அன்றுகரை சேர்த்த
கப்பரை யேந்தும் கரத்தோனே —இப்புவியில்
எப்போதும் போற்றி இருந்திடும் என்னிடர்
தப்பாமல் நீயே தகர்

(2) ஆடும் தியாகேச அம்பல வாணரே
நாடும் நலம்பலவும் நல்குவீர் - பீடுடைய
ஒற்றியூர் வாழும் உமையொரு பாகரே
பற்றினே னுந்தன் பதம்

(3) இடபத் தமரும் இமவான் மருகா
அடியார்க் கருள்வாய் அவர்தம்—மிடியற
இப்புவி வாழ்வோர் இனிதுடன் வேண்டிடத்
தப்பாமல் தந்தாய் தனம்

(4) ஈதல் குணம் கொண்ட ஈசன் கமலமலர்ப்
பாதம் தினம்பணிந்தே பக்தியுடன்—காதலால்
ஓம்நமசி வாயமென உள்ளத்தால் ஓதிட
நாம்பெறலாம் கோடி நலம்

(5) உரிதிருடி தங்கை உமையவள் போற்றும்
திரிசூலம் கைக்கொண்ட தேவா—பிரியமுடன்
உன்புகழ் பாடி உழன்றிடும் என்மனம்
இன்புறச் செய்வாய் இசைந்து

(6) ஊக்கமுடன் நாளும் உனதடியைப் போற்றுமென்
ஏக்கம் தனைமாற்றி எப்போதும்— காக்க

தொழுதிடும் என்மனத் துன்பம் துடைப்பாய்
மழுவேந்தும் கையால் மகிழ்ந்து

(7) எங்கும் நிறைந்திருக்கும் ஈசன் திருச்செயலைப்
பொங்கும் உவகையால் சொல்லிட—மங்காத
வெள்ளிமலைவாழும் வேணியன் தந்துவந்தான்
அள்ளக் குறையா அமுது

(8) ஏதம் தனைநீக்கி இன்பம் அளித்திடப்
பாதம் நிதம்பணிவேன் பாசமுடன்—மேதினியில்
உந்தன் புகழ்பாடும் உத்தமனுய் வாழச்செய்
நிந்திப் பவர்காண நேர்.

(9) ஐந்தெழுத்து மந்திரத்தை அன்றாடம் ஓதியுள்ளம்
நைந்திருக்கும் வேளையிலே நான்மகிழ-பைங்கிளியாம்
பார்வதியின் நாயகா பாசமுடன் உன்னைப்போல்
யார்தீர்ப்பார் எந்தன் இடர்.

(10) ஒப்புயர் வற்ற உனதருட் செய்கையைச்
செப்பினேன் உள்ளபடி சீராக—இப்பாவால்
நானுனை வேண்டிடும் நல்வரம் தந்திடு
ஊனுடல் வீழ்ந்திடும் முன்

(11) ஓங்கார நாதாயென் உள்ளத்தில் தோன்றிடும்
ஆங்காரம் நீக்கி அனுதினமும்—பாங்காய்
இருவிழி காக்கும் இமைபோல் இருந்தே
வருமிடர் தீர்ப்பாய் விரைந்து.

(12) அவ்வைக் கருள்புரிந்த ஆனை முகன் தந்தையின்
செவ்வியத் தாளை தினம்துதிக்க—எவ்வினையும்
அண்டாது என்றதனுல் ஆடியப் பாதனைக்
கண்டோர் குவிப்பர்தம் கை

(13) எஃகுபோலென் உள்ளம் இறுகாமல் காத்திட
வெஃகினேன் நின்னருளை வேணியனே-அஃதும்நான்
இப்பிறப்பில் மட்டுமின்றி எப்பிறப்பில் வந்தாலும்
தப்பாமல் கேட்டதைத் தா.

சிவ சிவ

## திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் சரஸ்வதிபூசை விசயதசமி மாகேசுவரபூசை நிதி முதற்பொருள்–ரூ. 25,000/-

"மதுரமொழுகும் கொழி தமிழ்ப் பனுவற்றுறைப்
படியும் மடநடைக் கூந்தலம்பிடி"

என்றும்,

"தெள்ளித் தெளிக்கும் தமிழ்க்கடலின் அன்பினைந்
திணையென எடுத்த இறைநூல்
தெள்ளமுது கூட்டுணுமோர் வெள்ளோதிமம்"

என்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலும்,

"நளினப் பொகுட்டெமது நன்னெஞ்செனக்
குடிபுகும் ஞானப் பிராட்டி"

என்று முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழிலும் கலைமகளைப் பாராட்டிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் காசிக்கு எழுந்தருளிய பொழுது அந்த நாட்டு மொழி கைவரப் பெறுவதற்காகப் பாடிய சகலகலாவல்லிமாலையில், கலைமகள் வெண்டாமரையிலும் பிரமன் நாவிலும் தொண்டர் செந்நாவிலும் அன்பர் கண்ணும் கருத்தும் நிறைந்து இருக்கிறாள் என்றும், அவள் ஞானத்தின் தோற்றம் என்ன நிற்பவள்–தெளிக்கும் பனுவற் புலவோர் கவி மழை சிந்தக் கண்டு களிக்கும் கலாப மயில்–கல்விப் பெருஞ்செல்வம் பேறு–கண் கண்ட தெய்வம்–என்று புகழ்ந்து பாடிய கலைமகளை வழிபடுவதற்குரிய புரட்டாசி வளர்பிறை நவமி தசமி ஆகிய சரசுவதி பூசை நாளிலும், விசயதசமி நாளிலும் ஸ்ரீகாசி மடத்தில் வழிவழி நடத்தப் பெற்று வருகிற சிறப்புப் பூசை, மாகேசுவர பூசை ஆகியவற்றை இனியும் தொடர்ந்து நடத்துவித்தற் பொருட்டு இத் தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21–ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் 31–ஆவது தருமமாக நிறுவப் பெற்றது. இது "திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் சரசுவதி பூசை, விசயதசமி மாகேசுவர பூசை நிதி" எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ 25,000/–(ரூபா இருபத்தைந்தாயிரம்/. இத்தொகை பின்வருமாறு நீண்டகால முதலீடுகளாக 61 மாதங்களுக்கு முதலீடு செய்யப் பெற்றுள்ளது;

| எண். | வங்கியின் பெயர் | பிக்சட் நெ | டெபாசிட் தேதி | வட்டி விகிதம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | கும்பகோணம் சிட்டி யூனியன்பாங்க்- திருப்பனந்தாள் | 31411 | 27-4-73 | 8-1/4% | ரூ.5,000/- |
| 2. | ஷ | 31412 | 27-4-73 | 8-1/4% | ரூ.5,000/- |
| 3. | கும்பகோணம் சென்ட்ரல் பாங்க் | 30/46 | 27-4-73 | 7-3/4 | ரூ.50000/- |
| 4. | ஷ | 30/47 | 27-4-73 | 7-3/4 | ரூ.5,000/- |
| 5. | கும்பகோணம் இந்தியன் பாங்க் | 179780 | 10-7-73 | 7-3/4 | ரூ.5,000/- |
| | | | | ஆக | ரூ. 25,000/- |

இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர் களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்

3 இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகையில் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகை முழுவதும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் சரசுவதி பூசை நாளிலும் விசயதசமி நாளிலும், காசிமடம் தோன்றிய நாள் முதற் கொண்டு நடத்தப் பெற்று வருகிற சிறப்புப் பூசை மாகேசுவர பூசை ஆகியவற்றுக்குச் செலவிடப் பெற்று வரும்.

4. இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப் பெறமாட்டாது; வட்டி வரவிற்கேற்பவும் பொருள்களின் காலவிலைக்கேற்பவும் நம்மாலும் நமக்குப்பின் வரும் காசிமடத்து அதிபர்களாலும் இதுகாறும் தயாரிக்கப் பட்டு வந்த திட்ட ஜாப்தாவை அனுசரித்துத் தயார்செய்யப் படும் திட்ட ஜாப்தவின்படி செலவு செய்யப் பெறும்.

5. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின்வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள்பேரிலும் இருந்து வரும் இம்முதற் பொருள்திருப்பியளிக்கப் பெற்றதும் அதிகவட்டி வரக்கூடிய அரசியல்கடன் தாள்களிலோ, நீண்ட கால முதலீடுகளிலே முதலீடுசெய்யப் பெறும்.

"தவளத் தாமரை தாதார் கோயில்
அவனைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே"

Tirupanandal
25—7—1973 } (Sd.)Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Tiruvidaimarudur Sub-Registrar's Office on 31—7—1973 as document No. 31/73 Book-4. Volume 59 Pages 115 to 117r

உ

சொக்கலிங்கம் துணை

Sri Kasi Mutt Religious Charities, Tirupanandal

PROPRIETOR & TRUSTEE

H. H: Silasri Kasivasi Muthukumaraswami Tambiran Swamigal Avergal

திருப்பனந்தாள்

# ஸ்ரீ வீரியம்மன் பங்குனி உத்திரப் பெருவிழா

27—3—74 முதல் 2—4—74 வரை

திருவிழாக் காலங்களில் திருமுறைப்பணி செய்யும் இசைவாணர்கள்:—

1 சுரலய இசைவள்ளல் திரு. M. கனகசபைப் பிள்ளை, ஸ்ரீ காசிமடம் சிவசிவ ஒலிமண்டப ஓதுவார், சிதம்பரம்.

2. திரு. M. சுப்பிரமணிய முதலியார், தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்.

3. சங்கீதபூஷணம் திரு, P. சாமிநாத முதலியார், சென்னை.

4. இசைநம்பி திரு. S. கல்யாணசுந்தர தேசிகர், ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், கும்பகோணம்.

5. தமிழ்மறைஇன்னிசைப்பண்மணிகள், திரு T. M. விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.

6. ஆடல்மாமணி திரு. S. சட்டைநாத முதலியார், திருப்பனந்தாள்.

7. திரு. தண்டபாணி ஓதுவார், திருப்பனந்தாள்.

8. திரு. T. R. கிருஷ்ணன், பிடில், கும்பகோணம்.

9. திரு. S.A. கோபாலன் வேய்ங்குழல் ஆசிரியர், திருப்பனந்தாள்

10. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்க ஆசிரியர், திருப்பனந்தாள்.

Sri Kasi Mutt
Religious Charities
Tirupanandal

உத்தரவுப்படி
K. M. Venkataramiah, M A
Manager

குறிப்பு:- திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் (1) 5-4-74உ பங்குனி உத்திரத்தன்று திருவாரூரிலும்' (2) 8-4-74உ காஞ்சிபுரம் ஸ்ரீஏகாம்பரநாதர் பங்குனி உத்திரப் பெருவிழாவிலும் இன்னிசைத் திருமுறைகோஷ்டி இரவில் நடத்தப்பெறும்: (3) 27-3-74உ பங்குனிப் பரணியில் கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்,

திருவீழிமிழலை: அப்பர்: திருத்தாண்டகம்

மாலாலும் அறிவரிய வரதர் போலும்
மறவாதார் பிறப்பறுக்க வல்லார்போலும்
நாலாய மறைக்கிறைவ ரானார் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்
வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
ஆலால மிடற்றடக்கி யளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

## திருமூலர் திருமந்திரம்

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மனி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே.

சிந்தையி னுள்ளே திரியும் சிவசத்தி
விந்துவு நாதமு மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதிய தாம்வண்ணத் தாளே.

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே,

## அபிராமி பட்டர் அபிராமி யந்தாதி

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்: ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

தொடுக்குங் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந்தமிழினொழுகுநறுஞ்சுவையேஅகந்தைக்கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே ஏறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவுள் ளத்தில்அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே

சகலகலாவல்லிமாலை: ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே

# காஞ்சிபுரத்தில் தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின்வண்ணம் நடத்தப்பெறுவது

**பிரமாதீசஞு பங்குனிமீ 26௳ (8-4-74) திங்கட்கிழமை**

## காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதசுவாமி
## பங்குனி உத்திரப் பெருவிழா 14-ம் திருவிழா

**திருமுறைவாணர்கள்:**

1. சுரலய இசைவள்ளல் திரு. M. கனகசபைப் பிள்ளை, ஸ்ரீ காசிமடம் சிவசிவ ஒலிபண்டப ஓதுவார், சிதம்பரம்.
2. சங்கீதபூஷணம் திரு. P. சாமிநாத முதலியார், சென்னை.
3. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள் திரு. T. M. விசுவ லிங்கம் சபாபதி சகோதரர்கள் திருவாவடுதுறை.
4. ஆடல்மாமணி திரு. S. சட்டைநாத முதலியார் திருமுறைப்பணி, திருப்பனந்தாள்.
5. திரு. V. இராமச்சந்திரன் ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார் திருமாகறல்.
6. திரு T. R. கிருஷ்ணன், பிடில், கும்பகோணம்.
7. திரு. S. A. கோபாலன் வேய்ங்குழல், திருப்பனந்தாள்.
8. திரு. கோ வேங்கடராமன், மிருதங்கம் திருப்பனந்தாள்

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி!

T. கந்தசாமி
நிர்வாக அறங்காவலர்
E. எல்லப்ப நாயக்கர்
S. பாண்டுரங்கம்
T. S. துரைசாமி
அறங்காவலர்கள்
S. கோவிந்தன்
—நிர்வாக அலுவலர்.

உத்தரவுப்படி
K. Subrahmanya Iyer B. A.
"Thiagarajavilasam"
Triplicane P. O. Madras-5

**குறிப்பு:** காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் சந்நிதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கிக் கச்சியேகம்பர் திருவுலா வரும் வீதிகளில் இரவில் இன்னிசைத் திருமுறை கோஷ்டி நடைபெறும்,

*சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ*

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களின் ஆணையின் வண்ணம்

# காஞ்சிபுரத்தில் நடைபெறும் தருமங்கள்

காஞ்சிபுரத்தில் உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி பயிலும் பெண்களுக்குத் தேவாரப் பரிசுகள் அளிக்கப்பெறுகிறது; மாணிக்கவாசக சுவாமிகள் நினைவில் சோமசுந்தர கன்யாவித்தியாலய உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளில் நால்வருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பெறுகிறது; உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகட்கு முதுமொழிமேல் வைப்புப் பரிசுகள் அளிக்கப்பெறுகிறது; மாசிமிருகசீரிடநாளில் கச்சியப்பசிவாசாரியர் நினைவிலும்; பங்குனி சுக்லபட்சம் துவிதியையில் ஸ்ரீ சாமிநாத சுவாமிகள் நினைவிலும், வைகாசி அமரபட்சம் திருதியை ஆகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாளிலும், ஆவணி மூலநாளிலும் சிறப்பு அன்னம்பாலிப்புக்கள் நடத்துவதோடு, நாடோறும் சிவாசாரியர் அறுவருக்கு அன்னம் பாலிப்பு நடைபெறுகிறது; ஸ்ரீ ஏகாம்பர நாதருக்கு மாதந்தோறும் ஒரு நாளிலும், ஆவணி மூல நாளிலும் புனுகு சட்டம் சார்த்தப் பெறுகிறது; கச்சியப்ப சிவாச்சாரியார் நினைவில் பசுப்பரிசும், சிவாசார்ய பட்டர் ஒருவருக்குக் காசியாத்திரை உதவியும் அளிக்கப் பெறுகிறது; திருவேகம்பப் பெருமான் பங்குனி உத்திரப் பெருவிழாவில் 14-ம் திருநாளில் தேவாரக்கோஷ்டி நடத்தப்பெறுகிறது; கந்தர் சஷ்டி விழாவில் குமரகோட்டத்தில் கந்தபுராணப் பிரசங்கங்கள் நடைபெறுகிறது; ஒரு ஓதுவார் நியமிக்கப்பெற்று நாடோறும் திருவேகம்பப் பெருமான் திருக்கோயிலில் திருமுறை விண்ணப்பம் நடைபெற்று வருகிறது.

**ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்**

**சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ**

உ

சொக்கலிங்கம் துணை

# திருவாரூரில் தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21 வது அதிபர்

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்**

சுவாமிகள் அவர்களின் ஆணையின்வண்ணம் நடத்தப்பெறுவது.

**பிரமாதீச ஞ பங்குனி மீ 23உ (5-4-74) வெள்ளிக்கிழமை**

## பங்குனி உத்திரம்

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே.

—திருநாவுக்கரசர்.

**திருமுறைவாணர்கள்:—**

1. சுரலய இசைவள்ளல் திரு. எம். கனகசபைப் பிள்ளை
ஸ்ரீ காசிமடம் சிவசிவ ஒலிமண்டப ஓதுவார், சிதம்பரம்.
2. திரு. M. சுப்பிரமணிய முதலியார், தேவார ஆசிரியர்,
திருப்பனந்தாள்.
3. தேவார இசைமணி திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்,
திருமுறைப்பணி திருச்சிராப்பள்ளி.
4. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள் திரு. T. M. விசுவலிங்கம்
சபாபதி சகோதரர்கள் திருவாவடுதுறை.
5. திரு. T. R. கிருஷ்ணன் பிடில், கும்பகோணம்.
6. திரு. S. A. கோபாலன். வேய்ங்குழல், திருப்பனந்தாள்.
7. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம், திருப்பனந்தாள்.

**ஆரூரமர்ந்த அரசே போற்றி**

| | |
|---|---|
| Sri Kasi Mutt<br>Religious Charities<br>Tirupanandal | By Order of His Holiness<br>K. M. Venkataramiah, M. A.<br>Manager |

**குறிப்பு:** நிறைசெல்வத் தியாகேசப் பெருமான் சந்நிதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கிச் சிவமே நிலவும் தேரோடும் வீதிகளில் இரவு முழுவதும் இன்னிசைத் திருமுறை பாடி மீண்டும் காலை 6 மணிக்கு வன்மீக நாதர் சந்நிதியில் பூர்த்தி செய்யப் பெறும்.

உ

சிவ சிவ

# சப்த விடங்கத் தலங்கள் - நடனம்

**திருவாரூர்** – **வீதிவிடங்கர்** - அசபா நடனம்: **திருநள்ளாறு**-**நகர விடங்கர்** - உன்மத்த நடனம்; **திருநாகைக்காரோணம்** - **சுந்தர விடங்கர்**-தரங்க நடனம்: **திருக்காருயில்** - **ஆதிவிடங்கர்** - குக்குட நடனம்: **திருக்கோளிலி**-**அவனிவிடங்கர்**-பிருங்க நடனம் **திருவாய்மூர்** - **மூலவிடங்கர்** - கமல நடனம்; **திருமறைக்காடு**-**புவனிவிடங்கர்**-ஹம்ஸபாத நடனம்.

---

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்
திருவாரூரில் நடத்தப்பெறும் தருமங்கள்

திருவாரூர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்க்குத் தேவாரப்பரிசும் முதுமொழி மேல் வைப்புப் பரிசுகளும் அளிக்கப் பெறுகின்றன. மனுநீதிச் சோழர் நினைவுப் பசுப்பரிசும் அளிக்கப்பெறுகிறது. ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுநாளில் அன்னம் பாலிப்பு நிகழ்த்தப் பெறுகிறது. பங்குனி உத்திரத்தன்று தேவார கோஷ்டி நடத்தப் பெறுகிறது. (திருக்கோயிலில் திருத்தொண்டத்தொகை சிலாசாசனம் செய்து பதிப்பிக்கப் பெற்றுள்ளது).

---

## திருநாவுக்கரசர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வண்டு லாமலர் கொண்டு வார்சடைக்(கு)
இண்டை மாலை புனைந்தும் இராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்(கு)
அண்டம் ஆளவும் வைப்பர் ஆரூரரே.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றுள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னுமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருச்சிற்றம்பலம்

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

60. திருவக்கரை பண்: பஞ்சமம்

கறையணி மாமிடற்றான்
  கரி காடரங் காவுடையான்
பிறையணி கொன்றையினான்
  ஒரு பாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் தன்தலையில்
  பலி கொள்பவன் வக்கரையில்
உறைபவன் எங்கள்பிரான்
  ஒலி யார்கழல் உள்குதுமே.

பொழிப்பு: விடக்கறை அழகு செய்யும் கரியமிடற்றை உடையவனும், கரிந்த சுடுகாட்டினை ஆடரங்காக உடையவனும், பிறைச்சந்திரனோடு அணிந்த கொன்றையை உடையவனும், ஒரு பாகத்தில் உமைப்பெண் இருத்தற்கு விரும்பியவனும், பிரமனது தலையோட்டில் பிச்சை ஏற்பவனும், திருவக்கரை என்னும் தலத்தில் தங்கி இருப்பவனும் ஆகிய சிவபெருமான் எங்களுக்குத் தலைவன். அவனுடைய ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடியை நினைக்கின்றோம்.

மா-கரிய; அமர்தல்-விரும்புதல்; மறையவன் - வேதம் ஓதும் பிரமன்; வக்கிராசூரன் பூசித்துப் பேறு பெற்றதால் இத்தலத்துக்குத் திருவக்கரை என்று பெயர் வந்தது. ஞானசம்பந்தர் வக்கரைப் பெருமானை வணங்கி இப்பதிகத்தை அருளிச்செய்தார். இப்பதிகத்தைப் பாடவல்லவரது வினை பற்றறும்:

61. திருவெண்டுறை பண்: பஞ்சமம்

ஆதியன் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியொர் மாதினொடும் பயிலும்பர மாபரமன்
போதிய லும்முடிமேல் புனலோடர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்புமிடம் வெண்டுறையே.

பொழிப்பு: முதல்வனும், ஆதிரை நாளை உகப்பவனும், நெருப்பில் கூத்தாடிய நிறைந்த அழகனும், உடம்பின் ஒரு-பாதியில் உமாதேவியோடு விளங்கும் பரமாபரமனும், கொன்றை ஊமத்தம் எருக்கு கொக்கரை முதலான பூக்கள் விளங்கும் முடியின்மேல் கங்கையோடு பாம்பை அணிந்த வேதியனும் ஆகிய சிவபெருமான் தகுதியால் விரும்பும் இடம் திருவெண்டுறை என்னும் தலமாகும்.

பரமா பரமன் – மேலானவற்றுக்கும் மேலானவன்; போது-பூக்கள்: வேதியன்–வேதத்தை அருளிச் செய்தவன்: மாதிமை–தகுதி. வெண்டுறையானது பிருங்கி முனிவர் வண்டு ருவம் எடுத்து இறைவனுக்கும் இறைவிக்கும் இடையே ஊடுவிச் சென்று வலம் வந்து வழிபட்ட தலம், ஞானசம்பந் தர் காறுயில் தேவூர் திருநெல்லிக்கா கைச்சினம் தெங்கூர் கொள்ளிக்காடு கோட்டூர் என்னும் தலங்களை வணங்கித் திரு வெண்டுறை சென்று தொழுதேத்தி இப்பதிகம் அருளிச்செய் தார். இப்பதிகத்தைப் பாட வல்லவரது வினை பற்றறும்.

62. திருப்பனந்தாள் பண்: பஞ்சமம்

கண்பொலி நெற்றியினன்
திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான்
மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர்
தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள்
திருத் தாடகை யீச்சரமே,

பொழிப்பு: கண் விளங்கும் நெற்றியை உடையவனும், கையில் விளங்கும் ஒப்பற்ற வெண் மழுவை உடையவனும், உமைப்பெண் கூடிய இடப்பாகத்தை உடையவனும், மிகுந்த பெருமையுடைய திருமாலாகிய இடபத்தை உடையவனும், வானில் விளங்கும் சிறந்த பிறைத் திங்கள் சேர்ந்த செஞ் சடை வேதியனும் ஆகிய சிவபெருமான் தங்கியுள்ள இடம் யாதெனில், குளிர்ந்த சோலைகள் சூழப்பெற்ற திருப்பனந்தா ளில் உள்ள திருத் தாடகையீச்சரம் என்னும் கோயில் ஆகும்.

மழு—கோடரி; மால்விடை-திருமாலாகிய இடபம்; செஞ் சடை வேதியன்—தலத்து இறைவன் பெயர்; திருப்பனந்தாள்-ஊர்ப்பெயர்; தாடகையீச்சரம்-கோயிலின் பெயர்; தாடகை பூசித்துப் பேறு பெற்றதால் இப்பெயர் பெற்றது. ஞானசம் பந்தர் சேய்ஞலூரில் வழிபட்ட பின்பு திருப்பனந்தாள் சேர்ந்து இறைவனை வணங்கி இப்பதிகத்தை அருளிச் செய் தார். இப்பதிகத்தைப் பாடவல்லவரது வினை பற்றறும்.

63. திருச்செங்காட்டங்குடி பண்: பஞ்சமம்

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

பொழிப்பு: மலர்களையுடைய புன்னை மரத்தின் கரியநிறக் கிளைகளில் வாழும் பறவைகளே! சிறுத்தொண்ட நாயனார் பணி செய்யும்படி திருச்செங்காட்டங்குடியில் பொருந்தி யுள்ள பெருமானும் சுடுகாட்டில் தீயை ஏந்திக்கூத்தாடும் பெருமானாகிய சிவபெருமான், என் உடம்பிலே பசலை நிறம் பரவுமாறு கைவளையின் ஆட்டத்தை நீக்கி எனக்கு நீங்காத காதல் நோயைத் தந்தான்.

புன்னைப் பைங்கோட்டுப் பறவை எனவும் சிறுத்தொண் டன் பணி செய்யச் செங்காட்டங்குடி மேய எனவும் மாறிக் கூட்டுக. கோடு-கிளை; பயப்பு - பசலை நிறம், ஊர - பரவ, சங்கு ஆட்டம் தவிர்த்தல்-சங்க வளையல்களைக் கழன்றுவிழச் செய்தல். ஞானசம்பந்தர் செங்காட்டங்குடி இறைவன் திரு முன்பு இப்பதிகத்தை அருளிச் செய்தார், இப்பதிகத்தை உரைப்போர் தக்கோராவர். (தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்'

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 | 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நானமணிமாலை உரையுடன் ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | ,, மூலம் ... | 0 | 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ... | 0 | 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 15 | கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 | 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 | 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 4 | 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 1 | 75 |
| 20 | திருவாசகம் (மூலம்) ... | 0 | 75 |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ... | 3 | 50 |
| 22 | 9–ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 | 56 |
| 23 | ,, ,, தெளிவுரை ... | 1 | 50 |
| 24 | திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ... | 2 | 50 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 2 | 50 |
| 26 | பேராயிரப் பனுவல்கள் ... | 0 | 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 | 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 31 | பழமொழித் திருமுறை ... | 0 | 25 |
| 32 | அப்பர்விழா வெளியீடு ... | 0 | 25 |
| 33 | Hymns and Proverbs ... | 0 | 35 |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | 1[illegible] |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485/57.

Regd No. M. 5574 குமரகுருபரன்

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | குமரகுரு[illegible] வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் | ... | 0 | 30 |
| 36 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | ... | 1 | 75 |
| 37 | திருவாசகம் தேனும் கனியும் | ... | 0 | 15 |
| 38 | தேவாரம் பாடும்பயன் | ... | 0 | 15 |
| 39 | காசிக்கலம்பகம் உரைநடை | ... | 0 | 15 |
| 40 | தாழைத் திருமுறை | .. | 0 | 15 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் | .. | 0 | 10 |
| 42 | நவக்கிரகமாண்பு | .. | 0 | 25 |
| 43 | ஸ்ரீ சைலம் | ... | 0 | 10 |
| 44 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் | ... | 0 | 37 |
| 45 | திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி | ... | 0 | 10 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | ... | 0 | 15 |
| 47 | திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) | ... | 2 | 00 |
| 48 | திருமுருகாற்றுப்படை | .. | 0 | 15 |
| 49 | தேவார வைப்புத்தல விளக்கம் | ... | 0 | 15 |
| 50 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | ... | 2 | 00 |
| 51 | திருக்குறள் மூலம் | ... | 0 | 25 |
| 52 | திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை | .. | 0 | 20 |
| 53 | திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை | | | |
| | இலக்கணக் குறிப்பின் விளக்கம் | .. | 0 | 13 |
| 54 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | .. | 0 | 60 |
| 55 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் | | | |
| | ஹிந்தி மொழிபெயர்ப்பும் | .. | 1 | 50 |
| 56 | திருக்குறள்-பொருட்பால் ,, | ... | 2 | 50 |
| 57 | திருக்குறள்-காமத்துப்பால் ,, | .. | 1 | 00 |
| | ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும் | ... | 4 | 00 |
| 58 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் | | | |
| | ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | ... | 1 | 25 |
| 59 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | .. | 1 | 00 |
| 60 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... | 3 | 00 |
| 61 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | ... | 0 | 50 |
| 62 | மங்கலம் | .. | 0 | 20 |
| 63 | திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | .. | 0 | 20 |
| 64 | கோதனத் திருமுறை | .. | 0 | 10 |
| 65 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | ... | 0 | 15 |
| 66 | பண்டார மும்மணிக்கோவை உரைநடை | ... | 0 | 15 |
| 67 | மகேசுவரபூசை | ... | 0 | 15 |
| 68 | கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர் | ... | 0 | 10 |
| 69 | திருவிசைப்பா தேனும் கனியும் | ... | 0 | 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்
2. "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-600005

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 628601 -74